




ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351









“பாஜகவை எதிர்த்து நாம் உறுதியாக போராடாவிட்டால்”

# ஆபத்து

## நமது இளைஞர்கள், பெண்கள், பட்டியல் சமூகத்தினர், பழங்குடியினர், ஓபிசி பிரிவினர் என அனைவரும் வரும் நாட்களில் பாதிக்கப்படுவார்கள். ஏனென்றால், பிரதமர் மோடி இந்த நாட்டு மக்களை அடிமைப்படுத்திவிடுவார்; கார்கே

புதுடெல்லி , பிப். 4–

“பாஜகவை நாம் உறுதியாக எதிர்த்துப் போராடாவிட்டால் நமது இளைஞர்கள், பெண்கள், பட்டியல் சமூகத்தினர், பழங்குடியினர், ஓபிசி பிரிவினர் என அனைவரும் வரும் நாட்களில் பாதிக்கப்படுவார்கள். ஏனென்றால், பிரதமர் மோடி இந்த நாட்டு மக்களை அடிமைப்படுத்திவிடுவார்” என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே காட்டமாக கூறினார்.




கிழக்கு டெல்லியில் நடைபெற்ற ‘நியாசங்கல்ப் சம்மவுன்’ பேரணியில் பங்கேற்ற கார்கே கூறியது: “நாட்டின் ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பை காப்பாற்ற பாதகமான சூழ்நிலையில் ராகுல் காந்தி ’பாரத் ஜோடோ நியாய யாத்திரை’யை மேற்கொள்கிறார். இந்தப் போராட்டம் தோல்வியடைந்தால் மோடி அரசின் கீழ் மக்கள் பாதிக்கப்படுவார்கள். ’பாரத் ஜோடோ நியாய யாத்திரை’யை மேற்கொள்ளும் ராகுல் காந்தியின் முடிவு மிகப் பெரிய நடவடிக்கை. பாஜக அரசின் அட்டூழியங்களுக்கு எதிராக அவர் போராடுகிறார்.

இப்போராட்டம் அரசியல் சாசனத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றும் போராட்டம். இதில் நீங்கள் பங்கேற்கத் தவறினால் நிரந்தரமாக பிரதமர் மோடியின் அடிமையாகிவிடுவீர்கள். பாஜகவை நாம் உறுதியாக எதிர்த்துப் போராடாவிட்டால்,நமது இளைஞர்கள், பெண்கள், பட்டியல் சாதியினர், பழங்குடியினர், ஓ.பி.சி.க்கள் அனைவரும், வரும் நாட்களில் பாதிக்கப்படுவார்கள். ஏனென்றால், பிரதமர், இந்த நாட்டு மக்களை அடிமைப் படுத்திவிடுவார்.

இளைஞர்களுக்கு ஆண்டுக்கு 2கோடி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதாக பிரதமர் மோடி அறிவித்தார். எங்கே அந்த வேலைகள்? ஒரு வருடத்துக்கு 2 கோடி வேலைவாய்ப்புகளை கண்டிப்பாக உருவாக்கித் தரமாட்டேன் என்பதே மோடியின் உண்மையான வாக்குறுதி. மேலும், அனைவருக்கும் ரூ.15 லட்சம் தருவதாக கூறினார். நாட்டிலுள்ள கறுப்புப் பணத்தை மீட்பதாக மோடி அளித்த வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றவில்லை. எல்பிஜி சிலிண்டரின் விலை, பிரதமர் மோடியின் ஆட்சிக் காலத்தில் உயர்ந்துள்ளது.

பிரதமர் மோடி நமது விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு துரோகம் செய்துள்ளார். தனது கருத்துகளை நாட்டின் மீது திணிக்க முயல்கிறார். எங்கள் போராட்டம் ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவுக்கு எதிரானது. அவர்கள் நாட்டை ஒழிக்கவும் ஏழைகளை அந்நியப்படுத்தவும் விரும்புகிறார்கள். பாஜகவின் பிரித்தாளும் கொள்கைக்கு எதிராக காங்கிரஸார் ஒவ்வொரு வீடாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பாஜக ஆட்சியில் நீடிக்கநாட்டு மக்களையும், எதிர்க்கட்சிகளையும் பயமுறுத்துகிறது. எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 411 சட்டமன்ற உறுப்பினர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் பல மாநிலங்களில் ஆட்சி அமைக்க பாஜக முயற்சித்தது.

டெல்லி காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் பூத் அளவிலான நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும். வாக்குப்பதிவின்போது எந்த முறைகேடுகளும் நடக்காமல் இருக்க நல்ல துடிப்பான கட்சித் தொண்டர்களை நியமிக்க வேண்டும். மக்களவைத் தேர்தலில் டெல்லியில் வெற்றி பெற்றால், நாட்டில் காங்கிரஸ் வெற்றி பெறும். தொண்டர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கடுமையாக உழைக்க வேண்டும்” என்றார் கார்கே.

# மாநில சுயாட்சியை வென்றெடுக்கும் மக்களுக்கான அரசு மத்தியில் அமைய ஓய்வின்றி உழைக்க வேண்டும்

## அண்ணா நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

ஸ்பெயின், பிப். 4–

அண்ணா நினைவு நாளையொட்டி ஸ்பெயினில் அலங்கரிக்கப்பட்ட அவரது திருவுருப்படத்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.



திமுக நிறுவனரும், தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான பேரறிஞர் அண்ணாவின் 55வது நினைவு நாள் நேற்று தமிழக அரசு சார்பிலும், திமுக உள்ளிட்ட பல்வேறு அரசியல்கட்சிசார்பிலும் அனுசரிக்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் கூறியதாவது, தமிழ்த்தாயின் தலைமகனாகப் பிறந்து, நமக்கெல்லாம் அண்ணனாக அறிவு மன்னனாக வழிகாட்டிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவுநாள். இன்று அமைதிப் பேரணியாகச் சென்ற கழக உடன்பிறப்புகள், பேரறிஞர் அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு உழைத்து மாநில சுயாட்சியை வென்றெடுக்கும் மக்களுக்கான அரசு மத்தியில் அமைய ஓய்வின்றி உழைக்க வேண்டும்! எண்ணித் துணிக கருமம்! என குறிப்பிட்டுள்ளார்.

# பாஜக மூத்த தலைவர் எல்.கே.அத்வானிக்கு பாரத ரத்னா விருது : பிரதமர் நரேந்திர மோடி தகவல்

புதுடெல்லி, பிப். 4–

பாஜக மூத்த தலைவர்களில் ஒருவரான எல்.கே.அத்வானிக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில், “ஸ்ரீ எல்.கே. அத்வானி ஜிக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளதை பகிர்ந்து கொள்வதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நாட்டின் மிகப்பெரிய இந்த கவுரவம் குறித்து அத்வானியிடம் பேசி எனது வாழ்த்துக்களை தெரிவித்தேன்.

நம் காலத்தில் மிகவும் மதிக்கப்படும் அரசியல்வாதிகளில் ஒருவராக, அத்வானி ஜி இந்தியாவின் வளர்ச்சிக்கு செய்த பங்களிப்பு மகத்தானது. அடிமட்ட தொண்டனில் தொடங்கி நமது நாட்டின் துணை பிரதமராக உயர்ந்தவர். உள்துறை அமைச்சராகவும், தகவல் தொடர்பு துறை அமைச்சராகவும் சிறப்பாக பணியாற்றினார். அவரது நாடாளுமன்ற விவாதங்கள் முன்னுதாரணமாக இருந்துள்ளன.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் கலாச்சார மறுமலர்ச்சியை மேம்படுத்துவதற்கு இணையற்ற முயற்சிகளை மேற்கொண்டவர் அத்வானி. அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட இந்த தருணம் எனக்கு மிகவும் உணர்ச்சி மிகுந்தது. அவருடன் பழகுவதற்கும், அவரிடமிருந்து கற்றுக்கொள்வதற்கும் எண்ணற்ற வாய்ப்புகள் கிடைத்ததை நான் எப்போதும் எனது பாக்கியமாகக் கருதுவேன்” எனத் தெரிவித்துள்ளார்.

பாஜக மூத்த தலைவரும், அக்கட்சியில் நீண்ட கால தலைவராக இருந்தவருமான லால் கிருஷ்ண அத்வானி. கடந்த 1927 ஆம் ஆண்டு அப்போதைய ஒருங்கிணைந்த இந்தியாவின், தற்போது பாகிஸ்தானின் பகுதியாக இருக்கும் கராச்சியில் பிறந்தார். இந்தியா– பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, அவரது குடும்பம் இந்தியாவுக்கு வந்தது. இளம் வயதிலேயே ஆர் எஸ் எஸ் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்ட அவர், பின்னர் ஜன சங்கத்திற்காக வேலை செய்தார். கடந்த 1980 ஆம் ஆண்டு பாஜகவை உருவக்கிய தலைவர்களில் அத்வானியும் ஒருவர். அதனைத் தொடர்ந்து வாஜ்பாயுடன் இணைந்து பாஜகவின் முகமாக நீண்டகாலம் அறியப்பட்டார். அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்காக 1990ல் அத்வானி நடத்திய "ரதயாத்திரை" தேசிய அரசியலில் ஒரு முக்கியமான திருப்பு முனையாக அரசியல் விமர்சகர்களால் கருதப்படுகிறது.



புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில், மணமேல்குடி, ஆவுடையார்கோவில், விராலிமலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களையும், புதுப்பிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்ட சமரச மையத்தினையும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் சஞ்சய் வி கங்காபுர்வாலா, சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆர்.மகாதேவன், ஆர்.சுரேஷ்குமார், வி.பவானி சுப்பராயன் , ஆர்.விஜயகுமார் , பி.டி.ஆதிகேசவலு, சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் நேற்று காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்து, புதுக்கோட்டை நீதிமன்றங்கள் செயல்படும் பாரம்பரியம் மிகுந்த கட்டிடங்களை புதுபித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, புதுக்கோட்டை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி பூரண ஜெய ஆனந்த், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, பொதுப்பணித்துறை முதன்மைப் பொறியாளர் (பொது) கே.பி.சத்யமூர்த்தி, மற்றும் வழக்கறிஞர் சங்கத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# ஜார்க்கண்ட் பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கேற்க ஹேமந்த் சோரனுக்கு நீதிமன்றம் அனுமதி

ராஞ்சி, பிப். 4–

ஜார்க்கண்ட் சட்டப்பேரவையில் திங்கள்கிழமை (பிப்.5) நடக்கவுள்ள நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கேற்க அம்மாநில முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரனுக்கு ராஞ்சி சிறப்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.



நில மோசடி தொடர்பான சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் கடந்த புதன்கிழமை அமலாக்கத் துறை ஹேமந்த் சோரனிடம் 7 மணி நேரம் விசாரணை நடத்தியது. விசாரணைக்கு பிறகு, அன்று இரவு 8.30 மணி அளவில் அமலாக்கத் துறை அதிகாரிகளால் சோரன் கைது செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து கட்சியின் மூத்த தலைவர் சம்பய் சோரனை புதிய முதல்வராக்க ஹேமந்த் முடிவு செய்தார். இதைத் தொடர்ந்து ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் ஆதரவு எம்எல்ஏக்களின் பட்டியல் வழங்கப்பட்டது.

கடந்த 1-ம் தேதி சம்பய் சோரன், ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணனை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரினார். தொடர்ந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சம்பய் சோரன் ஜார்க்கண்டின் முதல்வராக பதவி ஏற்றுக்கொண்டார். அவர் வரும் திங்கள்கிழமை (பிப்.5) சட்டப்பேரவையில் தனது பலத்தை நிரூபிக்க வேண்டும்.

இந்த நிலையில், திங்கள்கிழமை ஜார்க்கண்ட் சட்டப்பேரவையில் நடக்கவுள்ள நம்பிக்கை வாக்கெடுப்பில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் ராஞ்சியில் உள்ள பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் PMLA சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். நம்பிக்கை வாக்கெடுப்பில் ஹேமந்த் பங்கேற்க சிறப்பு நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்துள்ளது.

அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டுள்ள ஹேமந்த் சோரன், தற்போது 5 நாட்கள் அமலாக்கத் துறை காவலில் வைக்கப்பட்டுள்ளார். முன்னதாக, அமலாக்கத் துறையின் கைது நடவடிக்கையை எதிர்த்து ஹேமந்த் சோரன் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். விசாரணையின்போது, நீதிபதிகள் அமர்வு “நீங்கள் உயர் நீதிமன்றத்தில் ஏன் மனு தாக்கல் செய்யவில்லை?" என்று கேள்வி எழுப்பிய நீதிபதிகள், "உயர் நீதிமன்றங்கள் அரசியலமைப்பு நீதிமன்றங்கள். இன்று நாம் ஒருவரை இதுபோன்று அனுமதித்தால், அனைவரையும் பின்னாளில் அனுமதிக்க வேண்டும். நீதிமன்றங்கள் அனைவருக்குமானது. எனவே உயர் நீதிமன்றத்தை நாடுங்கள்" என்று குறிப்பிட்டனர்.

# புதுக்கோட்டை காந்தி பூங்கா மீட்பு குழு சார்பில் உண்ணாவிரத போராட்டம்

புதுக்கோட்டை , பிப். 4–

புதுக்கோட்டை காந்தி பூங்கா மீட்பு, பாராளுமன்ற தொகுதி மீட்பு மற்றும் புதுக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளில் நடைபெறும் பல்வேறு முறைகேடுகளை கண்டித்து தொடர் உண்ணாவிரத புதுக்கோட்டையில் நேற்று தொடங்கியது.



புதுக்கோட்டை காந்தி பூங்கா வாயிலில் அகில இந்திய மகாத்மா காந்தி சமூகநல பேரவை சார்பில் நடைபெற்று வரும் இந்த தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் பங்கேற்றுள்ளோர் காந்தி பூங்கா சமீப காலமாக தனியார் நபர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் இதனால் காந்தி பூங்காவின் நோக்கம் சீர்கெடுவதாகவும் அதேபோல் பாராளுமன்ற தொகுதி பறிபோயி புதுக்கோட்டை மாவட்டம் பரிதவித்து எந்த வளர்ச்சி திட்டமும் இல்லாமல் இருப்பதாகவும் போராட்டத்தை முன்னெடுத்துள்ள தினகரன் தெரிவித்துள்ளார்.

உண்ணாவிரத போராட்டத்திற்கு அனுமதி அளிக்காமல் உள்ள நிலையில் தாங்கள் கூட கூடாது போராட்டம் நடத்தக் கூடாது என்று காவல்துறை கண்டிப்புடன் தெரிவித்து போராட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட மைக் செட் உள்ளிட்ட பொருட்களை வாகனத்திலேயே அனுப்பி வைத்தனர் இதனால் அங்கு சலசலப்பு நிலவியுள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

மனிதனுக்கு எந்த அளவு அறிவு இருக்கிறதோ அதே அளவு முட்டாள்தனமும் அவன் மூலையில் எங்கோ ஒரிடத்தில் இருக்கிறது




## தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் பேறிஞர் அண்ணாவின் 55 வது நினைவு நாள் புதுக்கோட்டையில் நேற்று அனுசரிக்கப்பட்டது



புதுக்கோட்டை , பிப். 4-

பேரறிஞர் அண்ணா செப்டம்பர் 15ஆம் தேதி பிறந்து பிப்ரவரி 3ல் மறைந்தார் அவரது மறைந்த நாளை ஒட்டி திமுக, அதிமுக உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் அவரது சிலைக்கும் உருவப்படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

புதுக்கோட்டை அண்ணா சிலையில் உள்ள பெருந்தகை திருவுருவு சிலைக்கு திமுக மாவட்ட அலுவலகத்தில் இருந்து வடக்கு மாவட்ட செயலாளர் செல்ல பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா, முன்னாள் எம்எல்ஏ கவிதைபித்தன், நகர திமுக செயலாளர் செந்தில், உள்ளிட்டோர் பேரணியாக வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதேபோல் நெல்லுமண்டி தெருவில் உள்ள ஓபிஎஸ் ஆதரவுமாவட்ட அலுவலகத்தில் அவரது ஆதரவாளர்கள் மாவட்ட செயலாளர் ராஜசேகரன் தலைமையில் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர். அண்ணா சிலையில் உள்ள பேரறிஞர் சிலைக்கு அதிமுக சார்பில் நகர செயலாளர்கள் பாஸ்கர், சேட் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதேபோல் அமமுக, மதிமுக,தேமுதிக சார்பிலும் பல்வேறு அமைப்புகள் சார்பிலும் மாலை அணிவித்து பேரறிஞரின் நினைவைபோற்றி வணங்கினர்.

## எம்.ஆர். கல்லூரியில் வெற்றி நிச்சயம் வழிகாட்டி நிகழ்ச்சி



அரியலூர் : பிப். 4,

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களில், 10, 12ம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கான வெற்றி நிச்சயம் வழிகாட்டி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 1500 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஆர்.இரகுநாதன் தலைமை தாங்கினார். இயக்குனர் இரா.இராஜமாணிக்கம், முனைவர் வை.தியாகராஜன், நிர்வாக இயக்குனர் க.செந்தில்குமரன், இரா.கார்த்திகேயன் மற்றும் முதல்வர்கள் முனைவர் மதியழகன், சங்கீதா, சம்பத், மாலதி, பொறியாளர் சிவசங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு பேச்சாளர்களாக பட்டிமன்ற நடுவர் நகைச்சுவை அருவி, மதுரை முனைவர் தமிழ் இனியன், தன்னம்பிக்கை பேச்சாளர் மதுரை பத்திரிகையாளர் நவ்ஷாத் ஆகியோர் கலந்து கொண்டு எதிர்கால கல்வி, தேர்வை எதிர்நோக்கும் மாணவர்கள், தன்னம்பிக்கை என்ற தலைப்புகளில் மாணவர்களுக்கு தேவையான கருத்துக்களை கூறினார்கள். அதனை தொடர்ந்து மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் இயக்குனர் வை.தியாகராஜன் உடலும் உள்ளமும் என்ற தலைப்பில் பேசினார்.

நிகழ்ச்சியினை மீனாட்சி இராமசாமி கல்வியியல் கல்லூரி மாணவி பவித்ரா தொகுத்து வழங்கினார்.

இதில் கலந்துகொண்ட மாணவ, மாணவியர்கள், இந்த நிகழ்ச்சி எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது, தேர்வை எதிர்கொள்ள உற்சாகம் அளிப்பதாக இருந்தது என மகிழ்வுடன் மேடையில் ஏறி கூறினர். பொறியியல் கல்லூரி முதல்வர் மதியழகன் நன்றியுரை கூறினார்.

## ஓய்வூதியர் சங்கத்தின் ஸ்தாபக தினம்



புதுக்கோட்டை : பிப். 4-

தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கஸ்தாபகதினத்தையொட்டு நேற்று புதுக்கோட்டையில் கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது.

புதுக்கோட்டையில் உள்ள தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கக் கட்டிட வளாகத்தில் சங்கத்தின் கொடியை மாவட்டத் தலைவர் மு.முத்தை ஏற்றி வைத்தார். மாவட்ட நிர்வாகிகள் ஆர்.பிரதாப்சிங், என்.ராமச்சந்திரன், கி.ஜெயபாலன், ஆர்.சுப்பிரமணியன், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாவட்டத் தலைவர் எம்.மகாதீர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



▶ தென்காசி மாவட்டம், தமிழன்னையின் தலை மகன், தந்தை பெரியாரின் கொள்கை வாரிசு, முத்தமிழறிஞர் கலைஞரின் ஆசான், மாநில உரிமைக்காக டெல்லி கோட்டையை அதிர செய்த பேரறிஞர் அண்ணாவின் 55 -வது நினைவு நாளில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அவரது கொள்கை வழியில் கடையநல்லூர் திமுக நகரக் கழக சார்பாக நகர செயலாளர் எஸ்.அப்பாஸ் தலைமையில், நகரக் கழக அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் பி.எஸ். மணி மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர், 5-வது வார்டு பிரதிநிதி அபுபக்கர், மகாராஜா தியேட்டர் சலாம், இப்ராஹிம், வார்டு செயலாளர்கள் அபூபக்கர், சித்திக், அப்துல் ரசாக், லட்சுமணன், செல்லப்பா, பாலகிருஷ்ணன், சையது மக்தூம், நைனா முகமது, அப்துல் கபூர், ஹக்கீம், அப்பாஸ், பைசல் இளைஞரணி, சாகுல் ஹமீது, சிந்தாமதர் ஆகியோர் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவிற்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

## திருச்சுழி ஊராட்சி ஒன்றியக்குழுவின் சாதாரண கூட்டம்



அருப்புக்கோட்டை, பிப். 4-

அருப்புக்கோட்டை அருகில், திருச்சுழி ஊராட்சி ஒன்றியக்குழுவின் சாதாரண கூட்டம் திருச்சுழி அருகே ம.ரெட்டியாபட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றியக்குழு கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஒன்றியகுழு பெருந்தலைவர் பொன்னுத்தம்பி தலைமை தாங்கினார். ஒன்றிய துணைத்தலைவர் மூக்கையா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வராஜ், பத்மினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பின்னர் திறம்பட பணிபுரிந்த வட்டார வளர்ச்சி அலுவலர் பத்மினி மற்றும் இளநிலை உதவியாளர் காளிமுத்து ஆகிய இருவருக்கும் குடியரசு தினத்தன்று மாவட்ட ஆட்சியர் பாராட்டு சான்றிதழ் வழங்கியதையொட்டி, ஒன்றிய பெருந்தலைவர் பொன்னுத்தம்பி மற்றும் கவுன்சிலர்கள் அனைவருக்கும் நினைவு பரிசுகள் வழங்கி, பொன்னாடை போர்த்தி பாராட்டுகளை தெரிவித்தனர். இக்கூட்டத்தில் ஒன்றிய கவுன்சிலர்கள் சந்தனபாண்டி, நரசிங்கபெருமாள், நாகஜோதி தொல்காப்பியம், அன்னலெட்சுமி கருப்பசாமி, காளீஸ்வரி, காமிலாபர்வின் ரீயாதீன், கூடலிங்கம் உள்பட அரசு அலுவலர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## அரிமளம் ஒன்றியத்தில் வளர்ச்சி திட்ட பணிகளை கூடுதல் கலெக்டர் ஆய்வு



அரிமளம் : பிப். 4-

புதுக்கோட்டை மாவட்ட கூடுதல் கலெக்டர் அப்தாப் ரசூல், அரிமளம் ஒன்றியத்தில் ஆய்வு மேற்கொண்டர்.

அரிமளம் ஊராட்சி ஒன்றியம் ஓணாங்குடி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டம் மற்றும் மாவட்ட ஊராட்சி நிதியில் ரூபாய் 14 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிடத்தை பார்வையிட்டார். அங்கன்வாடி கட்டிடத்தின் கட்டுமான பணி தரத்தை ஆய்வு செய்தார். சரியான அளவில் கட்டிடம் கட்டப்படுகின்றதா கட்டிடத்திற்கு தேவையான தண்ணீர் ஊற்றப்படுகிறது ஆகியவற்றை பார்வையிட்டார். பின்னர் தமிழக முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஓணாங்குடி ஊராட்சி மரமடக்கி 12 கி.மீ தார்சாலை ரூபாய் 57.26 லட்சம் மதிப்பில் போடப்படுவதை பார்வையிட்டார். பணிகளை விரைவில் முடிக்க உத்தரவிட்டார். சத்திரம் கிராமத்தில் ரூபாய் 36 லட்சம் மதிப்பில் அமைக்கப்படும் தார் சாலையை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சி மன்ற தலைவகளுடன் கலந்துரையாடினார். ஊராட்சியில் காலதாமதமாக நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்தார். பணிகள் தாமதமாக நடைபெறுவதற்கு காரணம் என்ன ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் ஊராட்சி செயலாளர்களிடம் கேட்டறிந்தார். பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்கள் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்களை கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது ஒன்றிய குழு தலைவர் மேகலாமுத்து, உதவி செயற்பொறியாளர் அல்லி, கணக்கு அலுவலர் கண்ணன், ஆணையர் சிங்காரவேலு, வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணராஜா, ஒன்றிய பொறியாளர் முத்துக்குமார், இளநிலை பொறியாளர் அகிலாண்டம் , ஊராட்சி மன்ற தலைவர்கள் கடியாபட்டி உமாமகேஸ்வரி சோமசுந்தரம், ஓணாங்குடி முருகேசன், திருவாக்குடி கலாகருப்பையா, ஏம்பல் கனிமொழி முருகானந்தம் , இரும்பாநாடு முத்து, உள்ளிட்ட ஊராட்சி செயலாளர், அரசு ஒப்பந்தக்காரர்கள், ஒன்றிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ மதுரை பைபாஸ் சொக்கலிங்க நகர் அருகே அமைந்துள்ள ஆதாம் ஏவாள் ஆண்கள் அழகு நிலையத்தை சிவக்குமார் அர்ச்சனா தம்பதியினர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர். வினோத், பிருந்தா, பிரசாந்த், கீதா ஆகியோர் முன்னிலையில் ராஜேஷ் புவனா மற்றும் விவேக், வைஷ்ணவி தம்பதியினர் குத்து விளக்கு ஏற்றி விழாவை சிறப்பித்தனர்.

## கிராம ஊராட்சி மகளிர் வார்டு உறுப்பினர்களுக்கு இரண்டு நாள் புத்தாக்க பயிற்சி



புதுக்கோட்டை : பிப். 4-

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய கூட்டரங்கில் கிராம ஊராட்சி பெண் வார்டு உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் புத்தாக்க பயிற்சியினை வட்டார வளர்ச்சி அலுவலர் வேலு (கிராம ஊராட்சி) தொடங்கிவைத்தார்.

துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன் முன்னிலை வகித்தார். பயிற்சியில் கலந்துகொண்டு பயிற்சி பெற்ற பெண் வார்டு உறுப்பினர்களுக்கு ஒன்றியக்குழு தலைவர் சின்னையா சான்றுகளை வழங்கினார். பட்டுக்கோட்டை மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் முதல்வரின் உத்தரவுப்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்படட்ட 497 கிராம ஊராட்சி பெண் வார்டு உறுப்பினர்களுக்கு இரண்டு நாட்கள் புத்தாக்கப்பயிற்சி அணிவாரியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 27 கிராம ஊராட்சி பெண் வார்டு உறுப்பினர்களுக்கு அணி வாரியாக புதுக்கோட்டை ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் நடைபெறும் பயிற்சியில் முதல் அணியில் 7 கிராம ஊராட்சிகளை சேர்ந்த பெண் வார்டு உறுப்பினர்களுக்கு பயிற்சிகள் நடைபெற்றன.

இந்த பயிற்சியில் தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகளாக பெண்கள் பங்கேற்பு, உள்ளாட்சி நிர்வாகத்தில் மகளிர் பங்கு, பாலின சமத்துவம், அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் பெண்களுக்கான உரிமைகள், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டம்-1989. மத்திய, மாநில அரசு திட்டங்களில் மகளிர்க்கான சிறப்பு ஒதுக்கீடு, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் அளவில் அடைதல் ஆகிய தலைப்பின் கீழ் பயிற்றுநர்கள் சைவராசு மற்றும் மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சியளித்தனர்.

## பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு அரியலூரில் அதிமுக சார்பில் மௌன ஊர்வலம்



அரியலூர் : பிப். 4-

பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு அரியலூரில் அதிமுக சார்பில் மௌன ஊர்வலம் நடைபெற்றது.

முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணாவின் 55-வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அரியலூர் அதிமுக மாவட்ட செயலாளர் மற்றும் முன்னாள் அரசு தலைமை கொரடா தாமரை எஸ்.ராஜேந்திரன் தலைமையில் மௌன ஊர்வலமாக சென்று பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அதிமுக மாவட்ட பொருளாளர் அன்பழகன், நகர செயலாளர் ஏ.பி. செந்தில், ஒன்றிய செயலாளர் பொய்யூர் பாலசுப்ரமணியன், நல்லாம்பத்தை செல்வராஜ், மாவட்ட அணி நிர்வாகிகள் ஓ.பி.சங்கர், ஜீவா, அரங்கநாதன், வக்கீல் எஸ்.வி.சாந்தி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் சந்திரசேகர், எருத்துக்காரன்பட்டி காந்தி, சத்யா நகர் கோவிந்தசாமி, மாவட்ட தலைமையக நிர்வாகிகள் திருமூர்த்தி, துரைசாமி உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.



▶ புதுக்கோட்டை வசந்தபுரி நகர் வசந்த விநாயகர் ஆலயத்தில் துர்க்கை அம்மனுக்கு முதலாம் ஆண்டு திருவிளக்கு பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக துர்கை அம்மனுக்கும், வசந்த விநாயகர்க்கும் முருகப்பெருமானுக்கும் பல்வேறு அபிஷேகங்கள், சந்தனக்காப்பு அலங்காரங்கள், மகா தீபாரதனை நடைபெற்றது. ஆலயத்தின் வளாகத்தில் நடைபெற்ற திருவிளக்கு பூஜையில் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். திருவிளக்கு பூஜையினை சந்தோஷ்அய்யர், பார்த்தசாரதி உள்ளிட்டவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வினை வசந்தபுரி நகர் நல சங்க நிர்வாகிகள் நடராஜன், ஆறுமுகம், ஆர்ஆர் சுப்பு பழனிவேல், உள்ளிட்டவர்கள் வெகு சிறப்பாக நடத்தினர். பின்னர் அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது

## ஆலங்குடியில் உலக தொழுநோய் ஒழிப்பு தினம்



ஆலங்குடி : பிப். 4-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அரசு மருத்துவமனையில் உலக தொழுநோய் ஒழிப்பு தினம் தலைமை மருத்துவர் மு.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் லதா முன்னிலை வகித்தார். வட்டார மருத்துமில்லா மேற்பார்வையாளர் ராம.ராமநாதன் வரவேற்று பேசினார். இதில் செவிலியர்கள் செல்வகுமாரி, சசிரேகா, கலைச்செல்வி, உமா, திவ்யா மற்றும் சிவசங்கரி, ஜெயலட்சுமி, திருமாவளவன், மருத்துவமனை ஊழியர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு உலக தொழுநோய் ஒழிப்பு தின உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர். டாக்டர் மு.பெரியசாமி பேசுகையில், மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினமானது உலக தொழுநோய் ஒழிப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்தியா, பிலிப்பைன்ஸ, பிரேசில் போன்ற நாடுகளில் இதன் பாதிப்பு அதிக அளவில் உள்ளது, ஒவ்வொரு ஆண்டும் உலகில் சுமார் 139,500 பேர் தொழுநோயினால் பாதிக்கப்படுகின்றனர். இதில் 39.5% பெண்களும், 5% குழந்தைகளும் பாதிக்கப்படுகின்றனர். உணர்ச்சியற்ற தேமல் இந்நொயின் அறிகுறியாக உள்ளது. இதை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை பெற்றால், பெரும் பாதிப்புகளை தடுக்கலாம், இல்லாவிட்டால் இந்நோய் கண், காது, மூக்கு பல் போன்ற உறுப்புகளையும், நரம்புகளை பாதித்து மாறாத ஊணங்களை கை, கால்களில் உண்டாக்கி உருவத்தை மாற்றிவிடுகிறது.

இந்நோய் காற்றின் மூலம் பரவுவதால், முககவசம் போட்டுக்கொள்வதால் வராமல் தடுக்க முடியும். தொழுநோய்க்கு அரசு மருவத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் முற்றிலும் இலவசமான பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை முறைகள் வழங்கப்படுகின்றன. உலக சகாதார நிறுவனம் இந்த வருட உறுதிமொழி தீர்மானமாக "தொழுநோயை விரட்டி அடிக்கவேண்டும்" என்ற வாசகத்தை முன்மொழிந்துள்ளது. ஆகவே அனைவரும் தொழுநோய் ஒழிக்க பாடுபடவேண்டும் என்று கூறினார். முடிவில் ஜான் நன்றி கூறினார்.

# இலத்தூர் வடக்கு ஒன்றியத்தில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது

பவுஞ்சூர், பிப்-4

காஞ்சி தெற்கு மாவட்டம், இலத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணாவின் நினைவு தினத்தை முன்னிட்டு இலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.



உடன் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு வே.ஏழுமலை, எஸ்.கே.இராஜேந்திரன், ஒன்றிய துணை செயலாளர் கா.ஏமநாதன், இராணி பாண்டுரங்கன், ஒன்றிய பொருளாளர் ஜி.வெங்கடேசன், மாவட்ட பிரதிநிதிகள் பி.தேவராஜன், ஏ.சுந்தரவடிவழகன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மு.சீனுவாசன், வி.செல்வக்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் பிபாரதிபாபு, சுமதி, பரசுராமன் மற்றும் அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் எம்.பி.கதிரவன் உள்ளிட்ட நிர்வாகிகள், கழக உடன் பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள்.

# "சட்டம் பயிலும் பெண்கள் பாஞ்சாலி, கண்ணகி போல் வரவேண்டும்" – ப.சிதம்பரம் பேச்சு

காரைக்குடி: பிப் 4-

'சட்டம் படிக்கும் பெண்கள் பாஞ்சாலி, கண்ணகி போல் வர வேண்டும்' என காரைக்குடி அரசு சட்டக் கல்லூரி பூமிபூஜையில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.



சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் 2 ஆண்டுகளுக்கு முன் அரசு சட்டக்கல்லூரி அறிவிக்கப்பட்டு, தற்காலிகமாக அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் செயல்பட்டு வருகிறது.தற்போது 285 மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்நிலையில், அரசு சட்டக்கல்லூரி காரைக்குடி கழனிவாசல் பகுதியில் ரூ.100.42 கோடியில் 19.2 ஏக்கரில் அமைக்கப்படுகிறது.இதற்கான பூமிபூஜை நடைபெற்றது. முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், சட்டத் துறை அமைச்சர் ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கார்த்தி சிதம்பரம் எம்பி, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், சட்டத்துறை செயலர் ஜார்ஜ் அலெக்சாண்டர், சட்டக்கல்வி இயக்குநர் விஜயலட்சுமி, எம்எல்ஏக்கள் மாங்குடி, தமிழரசி, கல்லூரி முதல்வர் ராமபிரான் ரஞ்சித்சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் ரகுபதி பேசியது: "அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் அதிகளவில் மாணவிகள் படித்து வருகின்றனர். பெண்களுக்கு பாதுகாப்பான படிப்பு சட்டம் என முடிவெடுத்து பெற்றோர் தங்களது பிள்ளைகளை சட்டக் கல்லூரிகளில் சேர்க்கின்றனர். அரசு சட்டக் கல்லூரிகளில் பயின்றவர்கள் சோடை போவது கிடையாது. சிறந்த வீரர், வீராங்கனைகளாக வெளியே வருகின்றனர். வாதத்தை முன் வைப்பது, மறுப்பது, தீர்ப்பு சொல்வது என 3 விஷயங்களும் ஒருசேர உள்ள படிப்பு சட்டப்படிப்பு மட்டும் தான்.

மக்கள் நம்புவது நீதிமன்றத்தைத் தான். நீதிமன்றம் குறித்து விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு பாதுகாப்பில் இந்தியாவிலேயே தமிழகம் சிறந்து விளங்கி வருகிறது" என்று அவர் பேசினார்.

ப.சிதம்பரம் பேசும்போது, "எந்த துறையையும் சட்ட அறிவில்லாமல் நடத்த முடியாது. சட்ட அறிவு இல்லாமல் பொறுப்புகளை நிர்வகிக்க முடியாது. சட்டம் படித்தால் அனைத்து துறைகளுக்கும் செல்லலாம். முதல் பெண் வழக்கறிஞர் 'மகாபாரதம் பாஞ்சாலி' தான். அதற்கு அடுத்த வழக்கறிஞர் கண்ணகி. சட்டம் படிக்கும் பெண்கள் பாஞ்சாலி, கண்ணகி போல் வர வேண்டும்.

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த திமுக ஆட்சியில் மருத்துவக் கல்லூரி வந்தது. அதேபோல் தற்போது வேளாண்மை, சட்டக் கல்லூரி வந்தது. ஆனால் கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் ஒன்றும் வரவில்லை. காரைக்குடி செட்டிநாடு பகுதியில் அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் முயற்சி எடுக்க வேண்டும்.

புதிய சட்டக் கல்லூரி கட்டிடத்தை தரமாக கட்ட வேண்டும். கடந்த 1857-ம் ஆண்டு கட்டப்பட்ட சென்னை உயர் நீதிமன்றம், தற்போதும் உறுதியாக உள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், கட்டப்பட்ட கல்லணையும் உறுதியாக உள்ளது. கடந்த 2014-15-ம் ஆண்டில் அதிமுக ஆட்சியில் திருவள்ளூர் வட்டம் பட்டறைப்பெரும்புதூரில் சட்டக் கல்லூரி கட்டி உள்ளனர். மிக மோசமாக உள்ளது.

அரசு கட்டடம் என்பது 20 முதல் 25 ஆண்டுகள் தான் இருக்கும் என்பது போல் நமக்கு பழகிவிட்டது. அது தவறு. அரசு கட்டிடம் தனியாரை போன்று 100 முதல் 150 ஆண்டுகள் வரை நிலைத்திருக்க வேண்டும். முறையான பராமரிப்பு இருந்தால் நிற்கும். எங்கள் பகுதியில் சிமென்ட் இல்லாமல் சாந்து கலவை மூலம் கட்டிய வீடுகள் 120 ஆண்டுகளை தாண்டியும் இன்றும் கம்பீரமாக அழகாக நிற்கிறது. கோயிலுக்கு சமானது பள்ளிக்கூடம், அதுபோன்று கல்லூரியும் கோயில்தான். ஒப்பந்ததாரர் கல்லூரி கட்டிடத்தை தரமாக கட்ட வேண்டும்" என்று அவர் பேசினார்.

# புதுக்கோட்டை குளத்தூர் மகாத்மா மழலையர் தொடக்கப் பள்ளியில் மழலையர்க்கான பட்டமளிப்பு விழா

புதுக்கோட்டை : பிப். 4-

குளத்தூர் மகாத்மா மழலையர் தொடக்கப் பள்ளியில் மழலையர்க்கான பட்டமளிப்பு விழா, மேலும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா அழகம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.



மகாத்மா பள்ளி தாளாளர் ரவிசந்திரன் தலைமை வகித்தார். ஆலோசகர் நீலாவதி ராஜ்மோகன் மற்றும் பேராசிரியர் அய்யாவு, பேராசிரியர் பழனிசாமி முன்னிலை வகித்தார். நிகழ்வில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட காவல் துறை துணை கண்காணிப்பாளர் செங்கோட்டு வேலவன் மழலையர் குழந்தைகளுக்கான பட்டங்களை வழங்கி பேசினார். மேலும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள், நற்சான்றிதழ்கள் சிறப்பு விருந்தினர்கள் மண்டலத்தலைவர் அன்பு தனபாலன் கல்வியாளர்கள் பேராசிரியர் அய்யாவு, பேராசிரியர் பழனிசாமி, செல்லத்துரை, பரமசிவம், உள்ளிட்டவர்கள் வழங்கி பாராட்டினார்கள். வெற்றி பெற்ற 200க்கும் மேற்பட்டவர்கள் பரிசு பெற்றனர். நிகழ்வில்,கவிஞர் தங்கம்மூர்த்தி, அரசு சிறப்பு வழக்கறிஞர் எம்.செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டு பட்டம் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு தெரிவித்து வாழ்த்தினார்கள். ஆசிரியைகள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை பள்ளி தாளாளர் தலைமை ஆசிரியை, ஆசிரியைகள் சிறப்புடன் செய்தனர். முன்னதாக அனைவரையும் மகாத்மா மழலையர் தொடக்கப் பள்ளி மழலையர்கள் சிறப்புடன் வரவேற்றனர்.



பேரறிஞர் அண்ணாவின் நினைவுநாளில் சென்னை திருவொற்றியூர் அஜாக்ஸ் அருகில் உள்ள முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணாவின் சிலைக்கு சட்ட மன்ற உறுப்பினர், மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம், உத்தரவின் பேரில் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், பீஞ்சமந்தை மலை கிராமத்திற்கு பேருந்து வசதி ஏற்படுத்துவது தொடர்பாக வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி, துறை சார்ந்த அலுவலர்களுடன் கள ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வன அலுவலர் கலாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க. ஆர்த்தி, வருவாய் கோட்டாட்சியர் கவிதா, விழுப்புரம் கோட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் கணபதி உட்பட பலர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி, வேலூர் சத்துவாச்சாரி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு மாணவ, மாணவிகளுக்கு சமைக்கப்படும் மதிய உணவு சமையலறையை பார்வையிட்டார்.



சென்னை நம்மாழ்வார் பேட்டை பராக்கா ரோடு ரங்கநாதபுரதில் அமைந்துள்ள ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புணராவர்த்தன ஜீரணோத்தாரன் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சியாக நடைபெற்றது. மங்களகரமான சோபக்ருத் வருடம் தை மாதம் சப்தமி திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதனத்தில் மங்கள வாத்தியம் முழங்க வேத ஆகம முறைப்படி யாகசாலையில் இருந்து புனித நீர் கலசத்தின் மேல் கூற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் பின்பு வந்திருந்த அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இன்நிகழ்ச்சியை ஆலய நிர்வாகிகள் சிறப்பான முறையில் நடத்தினர்.



சென்னை ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக உலகளவில் லட்சக்கணக்கான குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கும் நிலையில், ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சென்னை அடுத்த பெரும்பாக்கம் ஏ.பி.பிளாக், எழில் நகரில், "உன் தேடல் உன்னோடு தான்" என்ற மாணவர்களின் பயிற்சி இடத்தில், அனைத்து மக்கள் சக்தி இயக்கம் சார்பாக 250-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு தானியங்கள், கடலை மற்றும் பருப்பு வகைகள் கொண்டு உருவாக்கப்பட்ட, ஆரோக்கியம் மிகுந்த சத்துமாவு வழங்கும் விழாவானது நடைபெற்றது.மேலும் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செம்மஞ்சேரி மற்றும் பெரும்பாக்கம் பகுதியின் "உன் தேடல் உன்னோடு" கல்வியாளர் திவ்யா செய்திருந்தார்.இந்த இயக்கத்தின் மாநில பொறுப்பாளர் கீதா, பவானி, மகளிர் அணி பொறுப்பாளர் கீதா , மற்றும் அமுதவல்லி, கலா, இந்திராணி, பேரைச்செல்வி, பிரியா, மைதிலி, சுகுணா மேலும் மாணவரணியின் ராகவன் மற்றும் பாய்ஸ் கிளப் மாணவ மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் காரைக்கால் மாவட்டத்தில் அமைந்துள்ள திருவேட்டக்குடி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவன் மூன்றாம் இடம் பிடித்தார். ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் பெங்களூரு விஸ்வேஸ்வரா தொழில்துறை தொழில் நுட்ப அருங்காட்சியகம் சார்பில் தென்னிந்திய அளவிலான அறிவியல் கண்காட்சி ஜனவரி 28- முதல் பிப்ரவரி 1-ஆம் தேதி வரை நடைபெற்றது. மாணவர்களின் தனிப்பிரிவில் பங்கு பெற்று திருவேட்டக்குடி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவன் சஞ்சய் ஸ்ரீராம் மூன்றாவது இடத்தை பெற்று புதுவை மற்றும் காரைக்காலுக்கு பெருமை சேர்த்தார். அதன் வழிகாட்டி ஆசிரியர் ஜி. ராஜு பட்டதாரி ஆசிரியர் பங்கு பெற்றார். இம்மானவனுக்கு துணையாக இருந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் செல்வி . மேலும் சேத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவி சஞ்சனா சிறப்பு பரிசையும் பெற்றார் . உடன் ஆசிரியர் சவிதா பங்கு பெற்றனர். கண்காட்சியில் 210 அறிவியல் கணிதம் தொழில்நுட்ப பிரிவுகளில் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.



பேரறிஞர் அண்ணாவின் 55-வது நினைவு தினத்தை முன்னிட்டு பேரணி மற்றும் கட்சி கொடியை ஏற்றி வைத்து அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை ஊராட்சியில் நடைபெற்றது. இதில்,சிறப்பு அழைப்பாளராக திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும்,எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளருமான பி.ஜே.மூர்த்தி கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில்,பொதுக்குழு உறுப்பினர் ஏ.வி.ராமமூர்த்தி,தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தி, வி.பி ரவிக்குமார்,ஏனம்பாக்கம் சம்பத்,ஒன்றிய துணைச் செயலாளர் வடமதுரை அப்புன் வக்கில்கள் சீனிவாசன், முனுசாமி, தனசேகர்,ஊராட்சிமன்றத்துணைத் தலைவர் பாக்கியலட்சுமி ரமேஷ்,வி.ஜி.பார்த்திபன், புஷ்பலிங்கம்,ஜெகநாதன், வி.எஸ்.ஜெகநாதன்,தனசேகர், உமாபதி,கணேஷ்,ஆறுமுகம், சங்கர்,பனப்பாக்கம் ஞானசேகர்,பேட்டைமேடு வேதமுத்து உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பெரியபாளையம் பவானி அம்மன் திருக்கோவிலில்

# அண்ணாவின் நினைவு தினத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு– பொது விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, பிப்4-

பேரறிஞர் அண்ணாவின் 55-வது நினைவு தினத்தை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம்,எல்லாபுரம் ஒன்றியம்,பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவிலில் சிறப்பு வழிபாடு 3,000 பேருக்கு பொது விருந்து,கோவிலுக்கு காணிக்கையாக வந்த புடவைகளை 4,000 பெண்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, கோவிலின் அறங்காவலர் அஞ்சன்லோகமித்ரா தலைமை தாங்கினார்.இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் கலந்து கொண்டு ஏழை பெண்களுக்கு இலவச புடவைகளை வழங்கி, பொது விருந்தை துவக்கி வைத்து, சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் மாவட்ட செயலாளர் இ.ஏ.பி.சிவாஜி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பி.ஜே. மூர்த்தி, மு.மணிபாலன், ஆ சத்தியவேலு, ஏ.வி.ராமமூர்த்தி, தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பொருளாளர் ரமேஷ், மாவட்ட கவுன்சிலர் ராமஜெயம், பொதுக்குழு உறுப்பினர் பா.சே.குணசேகர், கே.வி.லோகேஷ், வி.பி. ரவிக்குமார், வடமதுரை அப்புன், ஏனம்பாக்கம் சம்பத், வக்கீல்கள் சீனிவாசன், முனுசாமி, சங்கர், வெங்கடாசலம், பாகல்மேடு நாராயணன், வட்டார காங்கிரஸ் கட்சித் தலைவர் வெங்கல் சிவசங்கர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருக்கோவிலின் செயல் அலுவலர் பிரகாஷ் மற்றும் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் கட்சிக் கொடியை ஏற்றி வைத்து அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி



சென்னை, பிப்4-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மாவீரன் காடுவெட்டி குருவின் 63-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.இதை முன்னிட்டு வில்லிவாக்கம் ஒன்றியத்தை சேர்ந்த பொத்தூர்,பம்மதுகுளம், வெள்ளானுர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கட்சி கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் நாள்காட்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், கட்சிக் கொடியை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தலைவர் பி.எஸ்.சபாபதி ஏற்றி வைத்து கட்சியினருக்கு நாள்காட்டியை வழங்கினார். திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.சிவப்பிரகாசம் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஒன்றிய செயலாளர் சகாதேவன்,ஒன்றிய பொருளாளர் பவானி பன்னீர்செல்வம்,வழக்கறிஞர் வினோத்குமார்,அரவிந்த் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# கல்லங்குறிச்சி கலியபெருமாள் கோயிலில் சமபந்தி விருந்து

அரியலூர் : பிப். 4-

பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு, கல்லங்குறிச்சி கலியபெருமாள் கோயில் சமபந்தி விருந்து நடைபெற்றது.



முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணாவின் 55 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அரியலூர் அருகே கல்லங்குறிச்சி கலியுக வரதராஜ பெருமாள் கோவிலில் சமபந்தி விருந்து நடைபெற்றது.

கோவிலின் ஆதீன பரம்பரை தர்மகர்த்தா வெங்கடாஜலபதி மேற்பார்வையில் நடைபெற்ற இந்த சமபந்தி விருந்தில், தமிழக ஹிந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆய்வாளர் மா.சட்டநாதன், நிர்வாக அலுவலர் செல்வம், கிராம நிர்வாக அலுவலர் சாந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். 500க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு சமபந்தி விருந்து வழங்கப்பட்டது.

# திருமயம் அரசு மருத்துவமனைக்கு முத்து மீனாட்சி மருத்துவமனை சார்பாக 1.5 லட்சம் மதிப்பீட்டில் மொபைல் எக்ஸ்ரே திறப்பு விழா

திருமயம் : பிப். 4-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அண்ணா அரசு மருத்துவமனையில் மொபைல் எக்ஸ்ரே திறப்பு விழா நடைபெற்றது.



விழாவில் திருமயம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி முயற்சியில், அரண்மனைபட்டி கணபதி அழைப்பை ஏற்று முத்து மீனாட்சி மருத்துவமனை தலைமை மருத்துவர் கே.பெரியசாமி அரசு மருத்துவமனைக்கு வருகை தந்து மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் 1.5 லட்சம் மதிப்பீட்டில் உள்ள மொபைல் எக்ஸ்ரேயை திறந்து வைத்தார். இது மாதிரியான சமூக பணிகளை முத்து மீனாட்சி மருத்துவமனை நிர்வாகம் திறம்பட செய்து வருகிறது.

இவ்விழாவில், அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் உதவியாளர்கள், மருந்து விநியோகஸ்தர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். பொதுமக்கள் பார்த்து தெரிந்தவுடன் மகிழ்ச்சியுற்றனர். இது மாதிரியான சமூக பணிகளை செய்த முத்து மீனாட்சி நிர்வாகத்திற்கு திருமயம் அரசு மருத்துவமனை நிர்வாகம் நன்றியினை தெரிவித்துக் கொண்டது.

# அரியலூர் மாவட்டத்தில் சேலம் - செந்துறை புதிய பேருந்து வழித்தடம் அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்



அரியலூர் : பிப். 4-

அரியலூர் மாவட்டத்தில் சேலம் - செந்துறை புதிய பேருந்து வழி தடத்தை போக்குவரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சியில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம், மெய்யனூர் கிளை சார்பில், புதிய பேருந்து வழித்தடத்தினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிராமங்கள் வரை, பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் நேற்றைய தினம் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப, செந்துறை முதல் சேலம் வரை புதிய பேருந்து வழித் தடத்தினை, போக்குவரத்துத் துறை அமைச்சர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி சேலம் - திட்டக்குடி (வழி) ஆத்தூர், வேப்பூர், தொழுதூர் வரை பேருந்து இயக்கப்பட்டு வந்தது. தற்போது அரசுப்பேருந்து தடம் எண் 132யுதி திட்டக்குடி - செந்துறை (வழி) வசிஷ்டபுரம், குழுமூர், ஜெயங்கொண்டம்பிரிவு (வழித்தடம்நீளம்24கிமீ)நீட்டிப்பு செய்யப்பட்டு, நேற்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து சேலத்திலிருந்து செந்துறைக்கு காலை 4.26 மணிக்கு புறப்படும். அதேபோன்று காலை 9.35 மணிக்கு செந்துறையிலிருந்து ஆத்தூருக்கு புறப்படும். இந்த புறநகர் பேருந்து வழித்தடம் நீட்டிப்பால் வசிஷ்டபுரம், குழுமூர், ஜெயங்கொண்டம் பிரிவு பகுதி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் ஊர் பொதுமக்களுக்கு, சேலத்திலிருந்து செந்துறைக்கு நேரடி பேருந்து வசதி கிடைக்கப்பெற்று பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மேலாண் இயக்குநர் (சேலம்) பொன்முடி, துணை மேலாளர் வணிகம் சேலம் பாண்டியன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துகழக ஊழியர்கள், தொழிற்சங்கத்தினர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பண்பொழி திருமலை கோவிலில் சமபந்தி அன்னதான திருவிழா சிறப்பு பூஜை



தென்காசி : பிப். 4-

தென்காசி மாவட்டம், பண்பொழி திருமலை கோவிலில் பேரறிஞர் அண்ணா வழிகாட்டிய வழியில் தமிழ்நாட்டில் உரிமைகளை வென்றெடுக்க அண்ணாவின் 55-வது நினைவு நாளையொட்டி திருமலை கோவிலில் சமபந்தி அன்னதான நிகழ்ச்சி தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. காமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட திமுக முன்னாள் செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா.செல்லத்துரை தலைமையில் சிறப்பு அன்னதான பூஜை நடைபெற்றது.

இதில் மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி, மாவட்ட பொருளாளர் ஷெரிப், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ரா.முருகன், பொதுக்குழு உறுப்பினர் ராஜேஷ்வரன், பண்பொழிபேரூர் செயலாளர், சேர்மன் ராஜராஜன், வடகரை பேரூர் செயலாளர் ஷேக் தாவுது, கரிசல் வேலுச்சாமி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஜே.கே. ரமேஷ், பொன் செல்வன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ரஹீம், ஐவேந்திரன் தினேஷ், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் முகைதீன் கனி, திரிகூபுரம் பஞ்சாயத்து துணைத் தலைவர் செய்யது மீரான், நகரத் துணைச் செயலாளர் காசி, வார்டு செயலாளர் அப்துல் ரசாக், கே.டி.சி. முருகையா, ஜாகிர் உசேன், நல்லையா, மதியரசன், சாமி, ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பேரறிஞர் அண்ணாவின் 55-வது நினைவு தினம் உருவப்படத்திற்கு எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை



சென்னை : பிப். 4-

தமிழ்நாடு முன்னாள் முதல்-அமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது.

தமிழ்நாடு முன்னாள் முதல்-அமைச்சரும், தி.மு.க. நிறுவனருமான பேரறிஞர் அண்ணாவின் 55வது நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இந்நிலையில், அண்ணாவின் நினைவுதினத்தையொட்டி சென்னை பசுமைவழிச்சாலை இல்லத்தில் அண்ணாவின் உருவப்படத்திற்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மேலும் அண்ணாவின் நினைவுதினத்தையொட்டி எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் வலைதளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது, சமூகவியல் கொள்கையாக இருந்த திராவிடத்தை ஒப்பற்ற அரசியல் தத்துவமாக மாற்றியவரும், ஆட்சிக்கட்டிலில் திராவிடத்தை அமரச் செய்து, மாநிலத்தின் பெயர் முதல் அரசின் பதவிகள், கோப்புகள் வரை "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என நவீன தமிழ்நாட்டை கட்டமைத்து அதனை தமிழ்மயமாக்கிய மாபெரும் தமிழ் கனவு கண்ட, கழகத்தின் முதல் எழுத்து, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளில் அவரைப் போற்றி வணங்குவதுடன், தமிழ்நாட்டின் சீர்மிகு கொள்கைகளாகப் பேரறிஞர் அண்ணா நிறுவிய சமூகநீதி-சமத்துவம்-மாநில சுயாட்சி ஆகியவற்றை தொடர்ந்து பேணிக் காத்திடுவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஜனவரி மாதம் 23. 01. 2024 முதல் 02.02. 2024 வரை அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்பு பிரிவு நான்காவது படை பிரிவை சேர்ந்த துணை ஆய்வாளர் ராகுல்குமார் தலைமையில் கொண்ட 12 பேர் கொண்ட குழு காரைக்காலுக்கு வருகை புரிந்து காரைக்கால் மாவட்டத்தில் பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் தொழிற்சாலைகளிலும் அரசு பொது மருத்துவமனைகளிலும் மேலும் தாழ்வான பகுதிகளிலும் மாணவர்களுக்கும், தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கும் பேரிடர் காலங்களில் எவ்வாறு நடந்து கொள்வது மற்றவர்களை எப்படி காப்பாற்றுவது என்பது குறித்த பல்வேறு நிகழ்வுகளை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இதன் ஒரு பகுதியாக காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சந்தித்து செய்த பணிகள் குறித்து விரிவாக விளக்கி கூறினார்கள். காரைக்கால் மாவட்டத்தில் இக்குழு மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தமைக்கு ஆட்சியர் பாராட்டு தெரிவித்தார். இந்நிகழ்வில் துணை ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) த வெங்கடகிருஷ்ணன் வட்டாட்சியர் செல்லமுத்து ஆகியோர் உடன் இருந்தனர்.

# திராவிட இயக்கத்தின் ஒப்பில்லா ஆளுமை பேரறிஞர் அண்ணா : கனிமொழி



சென்னை : பிப். 4-

இந்தியா எனும் கூட்டாட்சி குடியரசுக்கு வித்திட்ட அண்ணா காட்டிய இலட்சியப் பாதையில் நாம் பயணத்தை தொடர்வோம் என திமுக மாநில துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

முன்னாள் முதலமைச்சரும், திமுக நிறுவனமான பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாள், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 3-ம் தேதி அனுசரிக்கப்பட்டு வருகிறது. அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் திமுக சார்பில் அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவது மற்றும் நினைவு பொதுக்கூட்டங்கள் நடத்துவது உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி நேற்று திமுக சார்பில் மூத்த நிர்வாகிகள் பேரணியாக சென்று சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, உதயநிதி ஸ்டாலின், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மா.சுப்பிரமணியன், ஆர்.காந்தி, வெள்ளக்கோவில் சாமிநாதன், எம்.பி.,க்கள் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், ஆ.ராசா, கனிமொழி எம்.பி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

இதன் ஒரு பகுதியாக தனது சமூக வலைதளப் பக்கத்தில் கனிமொழி எம்.பி பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அண்ணா நினைவு நாள் பேரணி புகைப்படங்களைப் பதிவிட்டுள்ள அவர், "மாநிலங்களின் தன்னாட்சியின் வழியே இந்தியா என்னும் கூட்டாட்சிக் குடியரசை நனவாக்கிட உழைத்திட்டவர், பேரறிஞர் அண்ணா அவர்கள். 'தமிழ்நாடு' எனும் இனமானப் பெயரை, நம் நிலத்திற்கு மீட்டளித்தவரின் நினைவு நாளில், அவரது நினைவிடம் நோக்கி நடைபெற்ற அமைதிப் பேரணியில் கழக நிர்வாகிகளுடன் பங்கேற்றோம். திராவிட இயக்கத்தின் ஒப்பில்லா ஆளுமையாக, அவர் காட்டிய இலட்சியப் பாதையில் நம் பயணத்தைத் தொடருவோம். ஜனநாயகத்தை வென்றெடுப்போம்." என்று பதிவிட்டுள்ளார்.

தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது, தமிழ்நாட்டின் தலைமகன், மாநில உரிமைகளின் போர்க்குரல், தமிழர்களை காக்க கழகமெனும் பேராயுதம் தந்தவர் நம் பேரறிஞர் அண்ணா. வங்கக் கடலோரம் துயில் கொள்ளும் நம் அண்ணாவின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செய்தோம். பேரறிஞர் அண்ணா காட்டிய வழியில் தமிழ்நாட்டின் உரிமைகளை வென்றெடுக்க மாநில சுயாட்சிக்கு ஊறு விளைவிக்கும் பாசிஸ்ட்டுகளை வீழ்த்த, அண்ணாவின் நினைவு நாளில் உறுதியேற்போம் என்று அமைச்சர் உதயநிதி கூறியுள்ளார்.

# செம்பனார்கோவிலில் பேரறிஞர் அண்ணா நினைவு தினம் அனுசரிப்பு





தரங்கம்பாடி, பிப்.4:

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் பகுதியில் பேரறிஞர் அண்ணா 55 வது நினைவு தினம்தினம் செம்பனார்கோவில் திமுக ஒன்றியத்தின் சார்பில் அனுசரிக்கப்பட்டது.

மறைந்த தமிழக முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு செம்பனார்கோவில் மேல முக்கூட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவ சிலைக்கு பூம்புகார் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் நிவேதா எம். முருகன் மாலை அணிவித்து மரியாதை செய்தார். இதில் தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பி.எம். ஸ்ரீதர், துணைத் தலைவர் ஞானவேலன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என். ரவி, ஒன்றிய செயலாளர்கள் பி.எம். அன்பழகன், எம். அப்துல் மாலிக், அமுர்த. விஜயகுமார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

# அரசு கல்லூரி மாணவர்களின் உழவாரப்பணி



அறந்தாங்கி : பிப். 4-

பெருநாவலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் அலகு-1 இன் சார்பில், மேனாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு, " தூய்மைப்பணியில் இளைஞர்களின் பங்கு" திட்டத்தின் ஒரு பகுதியாக, அழியாநிலை ஸ்ரீவிஸ்வரூப ஆஞ்சநேயர் கோயிலில் உழவாரப்பணி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் (பொ) பேராசிரியர் வீ.பாலமுருகன் தலைமையேற்று தொடங்கி வைத்தார். அழியாநிலை ஸ்ரீவிஸ்வரூப ஆஞ்சநேயர் கோயில் நிர்வாகி ரவிக்குமார் மாணவர்களை வரவேற்று வழிநடத்தி, நிறைவாகப் பாராட்டுரை வழங்கினார். இத்திருக்கோயில் உழவாரப்பணியில், நாட்டு நலப்பணித்திட்டம் அலகு-1 மாணவ, மாணவியர், கோயில் வளாகத்தில் அடர்ந்து படர்ந்திருந்த மரக்கிளைகளை வெட்டி அப்புறப்படுத்தினர். கோயிலில் உள்ள கோசாலை மற்றும் வைக்கோல் படைப்புகளை சீர்திருத்தினர்.

நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் அலகு-1 மு.பழனித்துரை, கல்லூரிப்பேராசிரியர்கள் ரா.ராஜலட்சுமி, த.அன்பரசு, பொ.கார்த்திகேயன் ஆகியோர் உழவாரப்பணியை ஒருங்கிணைத்திருந்தனர். உழவாரப்பணி ஏற்பாடுகளை அழியாநிலை ஸ்ரீவிஸ்வரூப ஆஞ்சநேயர் நற்பணி மன்றச் செயலர் கி.சுப்புராமன், துணைச்செயலர் செ.காளிமுத்து மற்றும் பல அடியார்கள் செய்திருந்தனர்.

# கறம்பக்குடி அருகே குட்டையில் விழுந்த காட்டெருமை மீட்பு



கறம்பக்குடி : பிப். 4-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே குட்டையில் விழுந்த காட்டெருமையை தீயணைப்பு துறையினர் மீட்டனர்.

கறம்பக்குடி அருகேயுள்ள சூரக்காடு கிராமத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு என்பவரது தோட்டத்தில் விவசாயப்பணிகளுக்காக நீரை தேக்கி வைப்பதற்காக வெட்டப்பட்டு சுமார் 15 அடி ஆழமுள்ள குட்டையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு அப்பகுதியில் சுற்றித்திரிந்த காட்டெருமை ஒன்று விழுந்துள்ளது. அது வெளியேற வழியில்லாமல் நீரில் தத்தளித்தவாறு குட்டைக்குள் கிடந்துள்ளது. நேற்று காலை அவ்வழியாகச் சென்றவர்கள் இதுகுறித்து தீயணைப்பு நிலையத்துக்கும், வனத்துறையினருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து அங்கு சென்ற கறம்பக்குடி தீயணைப்பு நிலையத்தினர் பொக்லைன் இயந்திரத்தின் உதவியோடு குட்டையில் இருந்து காட்டெருமையை வெளியேற வழிசெய்தனர். இதைத்தொடர்ந்து, காட்டெருமை குட்டையில் இருந்து வெளியேறி அங்கிருந்து ஓடியது. இதோடு, சில காட்டெருமைகளும் அப்பகுதியில் சுற்றித்திரிவதாக கூறப்படுகிறது. இதனால், அச்சமடைந்துள்ள அப்பகுதி மக்கள், மக்கள் வசிக்கும் இடங்கள், விளைநிலங்களில் சுற்றித்திரியும் காட்டெருமைகளை பிடித்துச்சென்று வனப்பகுதியில் விடுவதற்கு வனத்துறையினர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி வழிகாட்டுதல் களப்பயணம்



திருவரங்குளம் : பிப். 4-

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளம் வல்லத்திராகோட்டை வட்டார பகுதிகளில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வரும் பிளஸ் டூ மாணவ மாணவிகளுக்கு புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மஞ்சுளா வழிகாட்டுதலின்படி நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி வழிகாட்டுதல் களப்பயணம் நடந்த்து.

புதுக்கோட்டை அரசு கருணாநிதி மகளிர் கலை அறிவியல் கல்லூரிக்கு நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் களப்பயணம் மேற்கொண்டனர். கல்லூரி முதல்வர் ஜெ.சுகந்தி தலைமையில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகளுக்கு துறைவாரியாக உயர்கல்வி வழிகாட்டுதல் படி வேதியல், இயற்பியல் ஆய்வகங்களில் சோதனை செய்து காட்டினர், மேலும் கணினி வழி கல்வி பற்றியும் மாணவிகளுக்கு பேராசிரியர்கள் எடுத்து கூறினார். நான் முதல்வன் திட்ட களப்பயண ஏற்பாடுகளை திருவரங்குளம் வட்டார வள மைய மேற்பார்வையாளர் தங்கமணி வல்லத்திராகோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் குமார் மற்றும் ஆசிரியர் ஆசிரியைகள் செய்திருந்தனர்.

# தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணி



சங்கரன்கோவில் : பிப். 4-

தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் திமுக நிறுவனரும் முன்னாள் முதல்வருமான அறிஞர் அண்ணாவின் 55-வது நினைவு தினத்தை முன்னிட்டு அமைதி பேரணி நடைபெற்றது.

மாவட்ட அவைத் தலைவர் பத்மநாதன் தலைமை வகித்தார். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, யூஎஸ்டி சீனிவாசன், மாநில மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம், மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா முன்னிலை வகித்தனர். இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, திமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி ஆகியோர் கலந்துகொண்டு பேரணியை துவக்கி வைத்தனர்.

முன்னதாக வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அறிஞர் அண்ணாவின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் இருந்து கிளம்பிய பேரணி ரயில்வே பீடர் சாலை மெயின் ரோடு வழியாக சங்கரன்கோவில் பேருந்து நிலையம் அருகே வந்தடைந்தது. இதில் ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், கடற்கரை, பெரியதுரை, வெற்றி விஜயன், பூசைபாண்டியன், பொன்முத்தையாபாண்டியன், கிறிஸ்டோபர், சேர்மத்துரை, ராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சாகுல் ஹமீது, தேவதாஸ், கவுன்சிலர் மாரிசாமி, பராசக்தி, மகேஸ்வரி, வேல்சாமி பாண்டியன், மாரிச்சாமி நகர செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி அந்தோணிசாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் குருசாமி, மாரிமுத்து, ரூபி பாலசுப்ரமணியன் நகராட்சி சேர்மன்கள் சங்கரன்கோவில் உமா மகேஸ்வரி, புளியங்குடி விஜயா, பேரூராட்சி தலைவர்கள் கோமதி சங்கரி, இந்திரா, லாவண்யா, சார்பு அணி அமைப்பாளர்கள், வழக்கறிஞர் அணி வக்கீல் பிச்சையா, இளைஞர் அணி முகேஷ், மருத்துவர் அணி டாக்டர் மணிகண்டன், பொறியாளர் அணி பசுபதி பாண்டியன், மாணவரணி உதயகுமார், தொண்டரணி அப்பாஸ், மகளிர் அணி சிவசங்கரி, தகவல் தொழில் நுட்ப அணி கிப்ட்சன், சிறுபான்மையினர் அணி நாகூர் ஹனி, சார்பு அணி நிர்வாகிகள் ஆயில் ராஜா பாண்டியன், கார்த்தி, ராஜ், முருகராஜ், சரவணன், சேதுசுப்பிரமணியன், கருப்பசாமி, நகர அவைத் தலைவர் முப்பிடாதி, நகர பொருளாளர் லாசர், தொமுச மண்டல அமைப்புச் செயலாளர் மைக்கேல் நெல்சன், மின்வாரிய தொமுச திட்ட செயலாளர் மகாராஜன், சரவணமுருகையா, சத்யராஜ், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் வக்கீல் சண்முகையா, முப்பிடாதி, தொமுச கூட்டுறவு நியாய விலை கடை சங்க நிர்வாகிகள் முருகன், சரவணன், பிச்சையா, ஜெயராம், வார்டு செயலாளர்கள் பாட்டத்தூர் ராமலிங்கம் ,தங்கவேலு, முத்துக்குமார், வீரா, வீரமணி ஆறுமுகம் பழனிச்சாமி மாவட்ட பிரதிநிதிகள் முத்துக்குமார், செய்யது அலி, கவுன்சிலர்கள் ராமு, அலமேலு, விஜயகுமார், செல்வராஜ் வக்கீல்கள் கண்ணன் ஜெயக்குமார் மற்றும் அண்ணாமலை, ஜெயக்குமார் செந்தில் சத்யராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா இருசக்கர மிதிவண்டி வழங்கும் விழா



*கடையநல்லூர் : பிப். 4, தென்காசி மாவட்டம், கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில் தலைமையாசிரியர் ச.ராஜகோபால் தலைமை வகித்தார். பள்ளி மேலாண்மை குழுவின் தலைவி அமராவதி முன்னிலை வகித்தார், பள்ளி மேலாண்மை குழு புரவல உறுப்பினர் வழக்கறிஞர் எஸ். ஆர்.எஸ்.ரமேஷ், உறுப்பினர் சுந்தர், முதுகலைத்தமிழாசிரியர் சண்முகசுந்தரம், முதுகலை ஆங்கில ஆசிரியர் திருமலைச்செல்வி, முதுகலை இயற்பியல் ஆசிரியர் ராஜேஷ்குமார், வேளாண் ஆசிரியர் கண்ணன், முதுகலை பொருளியல் ஆசிரியர் சாம்சிகாபுதீன், உடற்கல்வி ஆசிரியர் குமாரசேகர், ஓவிய ஆசிரியர் முகைதீன் மற்றும் அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர்.*

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# தாய்லாந்து பாட்மிண்டன் தொடர்

## அரை இறுதி சுற்றில் அஷ்மிதா சாலிஹா



**பாங்காக் : பிப். 4,**

**தாய்லாந்து மாஸ்டர்ஸ் பாட்மிண்டன் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அஷ்மிதா சாலிஹா அரை இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.**

தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதி சுற்றில் 61-ம் நிலை வீராங்கனையான இந்தியாவின் அஷ்மிதா சாலிஹா, 44-ம் நிலை வீராங்கனையான இந்தோனேஷியாவின் எஸ்டர் நுருமி வார்டோயோவுடன் மோதினார். 57 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அஷ்மிதா சாலிஹா 21-14, 19-21, 21-13 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு கால் இறுதி சுற்றில் இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத் 19-21,15-21 என்ற நேர் செட் கணக்கில் நெதர்லாந்தின் மார்க் கால்ஜோவிடம் தோல்வி அடைந்தார். மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ட்ரீசா ஜாலி, காயத்திரி கோபிசந்த் ஜோடி 12-21, 21-17, 21-23 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் திவிபூஜி கசுமா, அமலியா சகயா பிரதிவி ஜோடியிடம் போராடி வீழ்ந்தது.

# பிரதமர் மோடியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற ரோகன் போபண்ணா



**புதுடெல்லி : பிப். 4,**

**அதிக வயதில் 'கிராண்ட்ஸ்லாம்' பட்டம் வென்ற வீரர் என்ற சாதனையை ரோகன் போபண்ணா படைத்துள்ளார்.**

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிச்சுற்றில், ரோகன் போபண்ணா-மேத்யூ எப்டென் இணை சாம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் அதிக வயதில் 'கிராண்ட்ஸ்லாம்' பட்டம் வென்ற வீரர் என்ற சாதனையை 43 வயது இந்திய வீரர் ரோகன் போபண்ணா படைத்தார்.

இதையடுத்து அவருக்கு தற்போது வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. இந்த நிலையில், பிரதமர் மோடியை நேரில் சந்தித்து ரோகன் போபண்ணா வாழ்த்து பெற்றுள்ளார். டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்த அவர், 'கிராண்ட்ஸ்லாம்' வெற்றிக் கோப்பையை காண்பித்தார். அப்போது போபண்ணாவை பிரதமர் மோடி பாராட்டி மகிழ்ந்தார். இது தொடர்பான புகைப்படங்களை போபண்ணா தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

# ரசிகரின் 'ஷூ'வில் கையொப்பமிட்ட டோனி



**மும்பை : பிப். 4,**

**இந்திய கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் டோனி சமீபகாலமாக தான் செல்லும் இடங்களில் ரசிகர்களை சந்தித்து வருகிறார். அப்போது ரசிகர்கள் அவரிடம் ஆட்டோகிராப் வாங்கி மகிழ்ச்சி அடைகின்றனர்.**

அந்த வகையில் சித்தார்த் கெர்கெட்டா என்பவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். அதில் எம்.எஸ்.டோனி ரசிகரின் 'ஷூ'வில் ஆட்டோகிராப் போட்டு கொடுக்கும் காட்சிகள் உள்ளது. உடனே அந்த ரசிகர் எல்லையில்லா மகிழ்ச்சி அடையும் காட்சிகள் பயனர்களை ரசிக்க செய்துள்ளது.

இந்த வீடியோ வைரலாகி 16 லட்சத்திற்கும் அதிகமான பார்வைகளை பெற்றது. இதைப்பார்த்த பயனர்கள் பலரும் அந்த ரசிகரை மிகவும் அதிர்ஷ்டசாலி எனவும், அவரது 'ஷூ' விலைமதிப்பற்றது எனவும் பதிவிட்டு வருகின்றனர். ஒரு பயனர், சித்தார்த் நீங்கள் அந்த ஷூவை எப்போதும் அணிய வேண்டாம். பிரேம் செய்யுங்கள் என பதிவிட்டுள்ளார்.

# 'ஒன் மேன் ஷோ' – ஜெய்ஸ்வால் இல்லையெனில் இந்திய பேட்டிங் காலி



**விசாகப்பட்டினம் : பிப். 4,**

**விசாகப்பட்டினத்தில் நடைபெறும் 2-வது டெஸ்ட் போட்டியின் 2-ம் நாளான நேற்று அனைவரின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்வதுபோல் இந்திய இடது கை தொடக்க வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் இரட்டைச் சதம் விளாசியதுடன் 209 ரன்களை 290 பந்துகளில் எடுத்து இந்திய அணி 396 ரன்களை முதல் இன்னிங்சில் எட்ட பெரும் பங்களிப்புச் செய்தார். ஜெய்ஸ்வால் இன்னிங்ஸ் இல்லையெனில் இந்திய அணி 220 ரன்களை எடுக்கத் திணறியிருக்கும்.**

பேட்டிங்குக்குச் சாதகமான பிட்சில் ஜெய்ஸ்வால் மட்டும்தான் அடித்துக் கொண்டே இருந்தார், மற்ற வீரர்கள் நன்றாகத் தொடங்கி பெரிய இன்னிங்ஸுக்குச் செல்லாமல் பொறுமை இல்லாமல் ஆட்டமிழந்தனர். ஷுப்மன் கில் 34 ரன்களிலும், ஸ்ரேயஸ் ஐயர் 27 ரன்களிலும், ரஜத் படிதார் 27 ரன்களிலும், விக்கெட் கீப்பர் ஸ்ரீகர் பரத் 17 ரன்களிலும் வெளியேறினர். தொடக்கத்தில் இறங்கிய யஷஸ்வி ஜெய்ஸ்வால் எந்தவிதப் பிரச்சனையும் இல்லாமல் ஆடினார். அவர் 19 பவுண்டரிகளையும் 7 சிக்சர்களையும் விளாசியதிலிருந்தே அவர் எந்த மூடில் ஆடினார் என்பது புரியவரும்.

22 வயதாகும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் இளம் வயதில் டெஸ்ட் இரட்டைச் சதம் கண்ட 3வது இந்திய வீரர். இவருக்கு முன்னதாக கிரிக்கெட் கரியர் பாதியிலேயே முடிந்த வினோத் காம்ப்ளி, அதற்கும் முன்னர் இளம் வயதில் தன் அறிமுகத் தொடரிலேயே அதிபயங்கர வேகப்பந்து வீச்சு அணியான மே.இ.தீவுகளுக்கு எதிராக மே.இ.தீவுகளில் 220 ரன்களை அடித்த சுனில் கவாஸ்கர் ஆகியோர் உள்ளனர். அதேபோல் காம்ப்ளி, கவுதம் கம்பீர், கங்குலிக்குப் பிறகு டெஸ்ட் இரட்டைச் சதம் கண்ட இடதுகை இந்திய பேட்டர் என்ற பெருமையையும் சேர்த்துக் கொண்டார் ஜெய்ஸ்வால்.

ஆனால் நன்றாக ஆடி வந்தவர் கடைசி வரை நாட் அவுட்டாகத் திகழ்ந்திருந்தால் சுனில் கவாஸ்கர், சேவாகிற்குப் பிறகு தொடக்கத்தில் இறங்கி கடைசி வரை ஆடிய சாதனையையும் நிகழ்த்தியிருப்பார். ஆனால் அங்குதான் இவருக்கு கொஞ்சம் கிரிக்கெட் சென்ஸ் இல்லை என்று தோன்றுகிறது. 7 பீல்டர்களைப் பவுண்டரியில் நிறுத்தி வைத்து ஜேம்ஸ் ஆண்டர்சன் வீசுகிறார், அவரை இறங்கி வந்து சிக்ஸர் விளாசினால் நம்மை ஊடகங்களும் ரசிகர்களும் பாராட்டுவார்கள் என்ற இளம் வீரருக்கேயுரிய ரத்தவேகத்தில் அடிக்கப் போய் கொடியேற்றி அவுட் ஆனார். அது ஓவரின் 5வது பந்து ஒரு சிங்கிள் எடுத்து அடுத்த ஓவருக்குச் சென்றிருந்தால், இப்படியே ஆடியிருந்தால் ஸ்கோர் 400-425 ரன்களையாவது எட்டியிருக்கும். அவசரப்பட்டு தவறான ஷாட்டைத் தேர்வு செய்தார்.

ஆனாலும் இவரது இன்னிங்ஸ் சேவாக், இலங்கைக்கு எதிராக அஜந்தா மெண்டிஸ் விக்கெட்டுகளைக் குவித்துக் கொண்டிருந்த போது இந்திய வீரர்கள் வரிசையாக ஆட்டமிழக்க சேவாக் 200 ரன்களை 221 பந்துகளில் அடித்தாரே அந்த இன்னிங்ஸிற்கு ஒப்பானதாகும். பிரமாதமான இன்னிங்ஸ், இன்னும் கொஞ்சம் சென்ஸுடன் ஆடியிருந்தால் கடைசி வீரர்களை வைத்துக் கொண்டு இன்னும் சுதந்திரமாக ஆடியிருக்கலாம். ஒருவேளை அவர் களைப்படைந்திருக்கலாம். இருப்பினும் 22 வயதில் ஒரு வீரர் இரட்டைச் சதம் அதுவும் இங்கிலாந்துடன் எடுக்கிறார் என்றால் அது சாதாரண காரியமல்ல. ஷிகர் தவானுக்குப்பிறகு நல்ல இடது கை தொடக்க வீரர் ஜெய்ஸ்வால் ரூபத்தில் கிடைத்திருக்கிறார்.

இந்நிலையில் எக்ஸ் பக்கத்தில் ஜெய்ஸ்வாலுக்கு ரசிகர்களின் பாராட்டுக் குவிந்து வருகிறது. ரசிகர் ஒருவர் ஜெய்ஸ்வாலின் இன்னிங்சை 'ஒன் மேன் ஷோ' என்று வர்ணித்து, 'ஒரே ஒருவர்தான் ரன் அடிக்கிறார்' என்று பாராட்டையும் கோபத்தையும் கலந்து பதிவிட்டுள்ளார்.

ஷிகர் தவான் தன் பதிவில், "யஷஸ்வி ஜெய்ஸ்வால், யூ பியூட்டி... உன் மட்டை மந்திரக் கோலானது. அட்டகாசமான 200 ரன்களுக்கு வாழ்த்துக்கள். கிரிக்கெட் வரலாறு மீண்டும் எழுதப்பட்டுள்ளது" என்று பாராட்டியுள்ளார். கெவின் பீட்டர்சன்: 'ஜெய்ஸ்வால் விளையாட்டில் ஒரு மகா கதை' என்று பாராட்டியுள்ளார்.

ஹர்ஷா போக்ளே தன் பதிவில், 'ஜேம்ஸ் ஆண்டர்சனை பார்த்து அந்த ஓவரில் ஆடிவிட்டு ஸ்பின்னர்களை தாக்கியிருக்கலாம், எது எப்படியிருந்தாலும் கனவு பேட்டிங் பிட்சில் என்ன ஒரு இன்னிங்ஸ்! இவருக்கு அடுத்த அதிகபட்ச ஸ்கோர் 34. ஜெய்ஸ்வால் இல்லையெனில் பிரச்சனைதான்" என்று பதிவிட்டுள்ளார்.

# ஜூனியர் உலகக் கோப்பை: நேபாளத்தை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது இந்தியா



**புளோம்பாண்டீன் : பிப். 4,**

**15-வது ஜூனியர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி (19 வயதுக்கு உட்பட்டோர்) தென் ஆப்பிரிக்காவில் நடந்து வருகிறது. தற்போது சூப்பர் சிக்ஸ் சுற்று போட்டிகள் நடைபெற்று வருகிறது.**

இதில் குரூப் 1 பிரிவில் இந்தியா இடம் பெற்றிருந்தது. முதல் ஆட்டத்தில் நியூசிலாந்தை 214 ரன் வித்தியாசத்தில் இந்தியா வென்றது. இந்நிலையில், இந்திய அணி தனது 2-வது மற்றும் கடைசி ஆட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நேபாளத்துடன் மோதியது. டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 297 ரன்கள் குவித்தது. சச்சின் தாஸ் 116 ரன்னும், உதய் சஹாரன் 100 ரன்னும் குவித்தனர். நேபாள அணி சார்பில் குல்சன் ஜா 3 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.

இதையடுத்து, 298 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் நேபாளம் களமிறங்கியது. இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறிய நேபாளம் அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 165 ரன்கள் மட்டுமே அடித்தது. இதனால் இந்தியா 132 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. இந்தியா சார்பில் சவுமி பாண்டே 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். நடப்பு தொடரில் இந்திய அணி தோல்வியே சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 'அனிமல்' பட சர்ச்சையால் மகிழ்ந்த ராஷ்மிகா




**மும்பை : பிப். 4,**

**'அனிமல்' படம் பல சர்ச்சையான விவாதங்களைக் கிளப்பியது. இதுகுறித்து தனக்கு மகிழ்ச்சியே என்று நடிகை ராஷ்மிகா மந்தனா பேசியுள்ளார். இது ரசிகர்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.**

நடிகை ராஷ்மிகா மந்தனா, ரன்பீர் கபூர் மற்றும் பலரது நடிப்பில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 'அனிமல்' படம் வெளியானது. இந்தப் படம் அதிகளவில் வன்முறை மற்றும் ஆணாதிக்க மனப்பான்மையோடு இருக்கிறது என்ற கடுமையான விமர்சனங்கள் எழுந்தது. இதுமட்டுமல்லாது, இந்தப் படம் இந்து-இஸ்லாம் வெறுப்பையும் பரப்புகிறது என்றும் இஸ்லாமிய மக்களைத் தவறாக சித்தரிக்கிறது எனவும் பலரும் இந்தப் படத்தைப் பற்றி கடுமையாகக் கூறினர்.

ஆனால், படக்குழு இதுபற்றி எதுவும் பதிலளிக்காமல் இருந்தனர். கடந்த சில நாட்களுக்கு முன்புதான் நடிகர் ரன்பீர் கபூர், ''அனிமல்' படம் பல விவாதங்களை கிளப்பியிருப்பது நல்லது என்றுதான் நாங்கள் நினைக்கிறோம்" என்றார்.

இதுபோலவே, தற்போது நடிகை ராஷ்மிகாவும் "'அனிமல்' படம் தொடர்பான சர்ச்சைகள் தனக்கு மகிழ்ச்சியே" எனக் கூறியுள்ளது ரசிகர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

நடிகை ராஷ்மிகாவிடம் 'அனிமல்' படம் தொடர்பாக எழுந்து வரும் சர்ச்சைகள் குறித்து பேட்டி ஒன்றில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், "இந்தப் படத்தை நாங்கள் உருவாக்கும் போதே, இது பலவகையான உரையாடல்களையும் சர்ச்சையையும் ஏற்படுத்தும் என்பது எங்களுக்குத் தெரியும். இப்போது அதுதான் நடந்து வருகிறது. உண்மையில் எனக்கு அது மகிழ்ச்சிதான். ஒவ்வொருவரின் கருத்தும் பார்வையும் இதில் வேறாக இருக்கிறது. யாரையும் குறை சொல்ல முடியாது. எல்லோரும் ஒரே மாதிரியாக படத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எல்லோருக்கும் பிடித்த இயக்குநராக நடிகராக இருப்பதை விட, அவர்கள் நமக்கு என்ன தருகிறார்கள் என்பதுதான் முக்கியம்" என்றார் ராஷ்மிகா.

# 1,000 ரூபாய்க்கு அன்லிமிடெட் மீல்ஸ் : ஓட்டல் தொழில் தொடங்கிய நடிகை சன்னி லியோன்



**உத்தரப்பிரதேசம் : பிப். 4,**

**பிற நடிகைகளைப் போலவே நடிகை சன்னி லியோனும் நடிப்பைத் தாண்டி ஓட்டல் தொழில் களம் இறங்கியுள்ளார். சன்னியின் இந்த புதுமுயற்சிக்கு ரசிகர்கள் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.**

பாலிவுட்டில் கவர்ச்சி நடிகையாக வலம் வரக்கூடிய சன்னி லியோன் இந்தி படங்களில் மட்டுமல்லாது தமிழிலும் சில படங்களில் நடித்துள்ளார். அத்துடன் நடிப்பதோடு தன் மூன்று குழந்தைகள் மற்றும் குடும்பத்துடனும் நேரம் செலவிட அவர் தவறுவதில்லை.

அவ்வப்போது தன் சமூக வலைதளப் பக்கங்களிலும் குழந்தைகளுடன் இருக்கும் கியூட்டான புகைப்படங்களையும் அவர் வெளியிடுவார். இந்த சூழ்நிலையில்தான் நடிகை சன்னி லியோன் நடிப்பைத் தவிர ஓட்டல் பிசினஸிலும் கால் பதித்துள்ளார். நடிப்பின் மூலம் சம்பாதித்த தனது பணத்தை ஓட்டல் தொழில் முதலீடு செய்துள்ளார் சன்னிலியோன். அதாவது, சியா லோகா என்கிற ஓட்டல் பிசினஸை உத்தரப் பிரதேசத்தில் தொடங்கியுள்ளார் சன்னி.

இதன் தொடக்க விழா சிறப்பாக, ஓட்டலில் பலவகையான வெரைட்டி சாப்பாடுகள் கிடைக்கும் என்று அறிவித்துள்ளார். அதாவது, ஒரு நபர் ரூ.1,000 செலுத்தினால் இங்கு உள்ள அனைத்து உணவுகளையும் அன்லிமிட்டடாக சாப்பிடமுடியும் என தெரிவித்துள்ளார். நடிப்பைத் தாண்டி சன்னி தொடங்கியுள்ள இந்த புதிய தொழிலுக்கு ரசிகர்கள் தங்கள் வாழ்த்துகளைக் கூறி வருகின்றனர்.

வரலாறு சினிமா

# ராக்கி திரைப்பட புகழ் கார்ல் வெதர்ஸ் காலமானார்



**அமெரிக்கா : பிப். 4,**

**1976ல் ஹாலிவுட்டின் ஹீரோ சில்வெஸ்டர் ஸ்டாலோன் கதாநாயகனாக நடித்து வெளிவந்த திரைப்படம், ராக்கி.**

ஸ்டாலோனை புகழேணியின் உச்சாணிக் கொம்பில் நிறுத்திய இத்திரைப்படத்தில், அப்போல்லோ க்ரீட் எனும் பிரபல ஹெவிவெயிட் குத்துச்சண்டை வீரரை, ராக்கி பல்போவா எனும் உள்ளூர் வீரர் போட்டியிட்டு வெல்வார். இதில் ராக்கி பல்போவா கதாபாத்திரத்தில் சில்வெஸ்டர் ஸ்டாலோன் நடித்திருந்தார்.


அப்போல்லோ க்ரீட் கதாபாத்திரத்தில் கார்ல் வெதர்ஸ் எனும் அமெரிக்க தொழில்முறை கால்பந்து வீரர் சிறப்பாக நடித்திருந்தார். ராக்கி திரைப்பட நடிகர்களுக்கான தேர்வின் போது, கார்ல் வெதர்ஸ், அங்கு உடன் நடித்த ஸ்டாலோனின் நடிப்பில் உள்ள குறைகளை வெளிப்படையாகவும், துணிச்சலாகவும் விமர்சித்தார்.

கார்ல் வெதர்ஸின் விமர்சனங்களை நேர்மறையாக எடுத்து கொண்ட சில்வெஸ்டர் ஸ்டாலோன், கார்ல் வெதர்ஸ் தான் "அப்போல்லோ க்ரீட்" கதாபாத்திரத்திற்கு பொருத்தமானவர் என அவரை தேர்ந்தெடுத்தார். அப்படத்தில் இருவருக்குமான குத்து சண்டை காட்சிகளில் சில இடங்களில், ஒருவரையொருவர் நிஜமாக தாக்கி கொள்ள நேர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இதை தொடர்ந்து ராக்கி-2, ராக்கி-3 மற்றும் ராக்கி-4 என 4 பாகங்களிலும் கார்ல் வெதர்ஸ், ஸ்டாலோனுடன் நடித்து புகழ் பெற்றார். மேலும், 1987ல் வெளியான அர்னால்டு ஸ்வார்ஸ்னேக்கர் கதாநாயகனாக நடித்த ப்ரிடேட்டர் திரைப்படத்தில் அர்னால்டுக்கு இணையான கதாபாத்திரத்திலும் நடித்து புகழ் பெற்றார்.

கார்ல் வெதர்ஸ், அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலிஸ் நகரில் தனது குடும்பத்தினருடன் வசித்து வந்தார். இந்நிலையில், தனது 76-வது வயதில் பிப்ரவரி 1 அன்று கார்ல் வெதர்ஸ் காலமானார். "உறக்கத்திலேயே கார்ல் வெதர்ஸின் உயிர் பிரிந்தது. அவர் ஒரு நல்ல குடும்ப தலைவனாக வாழ்ந்தார். விளையாட்டிலும், கலைத்துறையிலும் தனி முத்திரையை பதித்ததை தாண்டி ஒரு மிகச் சிறந்த மனிதராக திகழ்ந்தார்" என கார்ல் வெதர்ஸின் குடும்பம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்டாலோன் உட்பட பல ஹாலிவுட் பிரபலங்கள் கார்ல் வெதர்ஸ் மரணத்திற்கு வருத்தம் தெரிவித்து சமூக வலைதளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# நியூ பப்ளிசிட்டி மேனேஜர் இவர்தான் விக்னேஷ் சிவன் பதிவு



**கோவை : பிப். 4,**

**இயக்குனர் விக்னேஷ் சிவன் 'எல்.ஐ.சி' (லவ் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன்) என்ற புதிய படத்தை இயக்குகிறார். இந்த படத்தில் பிரதீப் ரங்கநாதன் கதாநாயகனாக நடிக்கிறார். மேலும், எஸ்.ஜே.சூர்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.**

செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் கடந்த டிசம்பர் மாதம் தொடங்கியது. இதையடுத்து இப்படத்தின் படப்பிடிப்பு கோயம்புத்தூர் ஈஷா யோகா மையத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் 'எல்.ஐ.சி' படத்தின் படப்பிடிப்பு தள ஸ்னீக் பீக் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இதில் ஷோஃபா விற்கும் வீடியோ மூலம் சமூக வலைதத்தில் பிரபலமான 'Sofa Boy' சிறுவன் முகமது ரசூல் படக்குழுவினரை விற்பது போன்று காமெடி செய்யும் இந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. மேலும், இந்த வீடியோவில் 'எல்.ஐ.சி' டீம் நியூ பப்ளிசிட்டி மேனேஜர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தலைப்பிலேயே தவறவிட்ட விஜய்



**சென்னை : பிப். 4,**

**தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான விஜய் தனது மக்கள் இயக்கத்தின் மூலம் அரசியல் கட்சிகளுக்கு இணையாக பல்வேறு மக்கள் நலப்பணிகளை செய்து வருகிறார்.**

அரசியல் கட்சிகளில் இருப்பது போல் இயக்கத்தில் பல அணிகளும் உருவாக்கப்பட்டு மக்கள் பணிகள் செய்யப்பட்டு வந்தது. சமீபத்தில் புயல் மழையால் தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இதை தொடர்ந்து விஜய் நேரில் சென்று பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவித்தொகை மற்றும் நிவாரணப் பொருட்கள் வழங்கினார். இதைத்தொடர்ந்து நடிகர் விஜய் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தனது கட்சிக்கு 'தமிழக வெற்றி கழகம்' என பெயர் வைத்துள்ளதாக அறிவித்தார். இதைத்தொடர்ந்து 2026-ஆம் ஆண்டின் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதே நம் இலக்கு என்று குறிப்பிட்டிருந்தார். இவருக்கு அரசியல் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் என பலர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், நடிகர் விஜய் தொடங்கிய கட்சியின் பெயரில் தவறு இருப்பதாக வைரல் தமிழ் ஆசிரியர் கதிரவன் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதாவது 'தமிழக வெற்றி கழகம்' என்றில்லாமல் 'தமிழக வெற்றிக் கழகம்' என வரவேண்டும் என்று விளக்கமளித்து சமூக வலைதளத்தில் வீடியோ வெளியிட்டுள்ளார். இது தற்போது பேசுப்பொருளாகியுள்ளது.

வரலாறு உலகம்

# உலக வங்கியிடம் ரூ.1,244 கோடி கடன் வாங்கும் இலங்கை




**கொழும்பு : பிப். 4,**

**நாட்டின் நிதித்துறை பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த கடன் பெறப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நமது அண்டை நாடான இலங்கையில் கடந்த 2022-ம் ஆண்டு வரலாறு காணாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இது மக்களின் கோபத்தை தூண்டி ஆட்சியாளர்களை பதவிவிலக வைத்தது. எனினும் அந்த நாடு இன்னும் பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீளவில்லை.

இந்த நிலையில் உலக வங்கியிடம் இருந்து 150 மில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.1,244 கோடி) கடன் பெற இருப்பதாக இலங்கை நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. நாட்டின் நிதித்துறை பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும்நோக்கில்இந்த கடன் பெறப்படுவதாகவும், இது தொடர்பான ஒப்பந்தம் அண்மையில் கையெழுத்தானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நிதி அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், "உலக வங்கியில் இருந்து கடன் பெறும் திட்டம் இலங்கை மத்திய வங்கியால் நிர்வகிக்கப்படும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும். இதன் மூலம் இலங்கை நிதித் துறையின் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்த முடியும்" என்றார்.

# நெருங்கி வரும் பொதுத்தேர்தல் பாகிஸ்தானில் 10 இடங்களில் வெடிகுண்டு தாக்குதல்



**இஸ்லாமாபாத் : பிப். 4,**

**பாகிஸ்தானில் அடுத்த வாரம் பொது தேர்தல் நடக்க உள்ள நிலையில், பல்வேறு இடங்களில் வெடிகுண்டு மற்றும் கையெறி குண்டு மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் முதியவர் ஒருவர் பலியாகி உள்ளார்.**

பாகிஸ்தானில் வருகிற 8ம் தேதி பொதுதேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் பலுசிஸ்தான் மாகாணத்தின் தலைநகர் குவட்டா, குஸ்தார், தர்பத், உட்பட பல்வேறு இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் உள்ள காவல்நிலையங்கள், துணை ஆணையர் அலுவலகங்களை குறிவைத்து மர்மநபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சுமார் 10 வெடிகுண்டுகள் மற்றும் கையெறி குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக போலீசார் தரப்பில் கூறப்படுகின்றது. மேலும் 8 கிலோ வெடிப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிகிறது. வெடிகுண்டு தாக்குதலில் 84வயது முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் போலீஸ் அதிகாரிகள், காவலர்கள் காயமடைந்துள்ளனர். தேர்தல் பிரச்சாரம் தொடர்பான எந்த நிகழ்ச்சியும் நடைபெறாத நிலையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதால் தாக்குதலுக்கான காரணங்கள் தெரியவில்லை.

# முதல் முறையாக 400 கிலோ போதைப்பொருட்களுடன் இந்திய வம்சாவளி டிரைவர் கனடாவில் கைது



**டொரண்டோ : பிப். 4,**

**400 கிலோ எடையுள்ள மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருட்களுடன் இந்திய வம்சாவளி டிரைவர் ஒருவர் கனடாவில் கைது செய்யப்பட்டார்.**

கனடா நாட்டின் மானிடோபா மாகாணத்தின் போய்செவைன் பகுதி வழியாக அண்மையில் ஒரு லாரி வந்தபோது அதை போலீஸார் மடக்கி சோதனை நடத்தினர். அதில் 406.2 கிலோ எடையுடைய மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து வாகனத்தை ஓட்டிய டிரைவர் கோமல்பிரீத் சித்து கைது செய்யப்பட்டார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவரது குடும்பம் கனடாவில் வசித்து வருகிறது. இந்த போதைப்பொருளானது மிகப்பெரிய சூட்கேஸ்களில் அடுக்கி லாரிக்குள் வைக்கப்பட்டிருந்தது. இதன் மதிப்பு 5.1 கோடி கனடா டாலர் ஆகும்.

இதுகுறித்து கனடா எல்லைச் சேவை ஏஜென்சியின் மண்டல பொது இயக்குநர் ஜனாலி பெல்-பாய்சுக் கூறும்போது, "கடந்த ஜனவரி 14-ம் தேதி எல்லைப் பகுதியில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது இந்த போதைப்பொருட்களை கைப்பற்றினோம். கனடாவில் பிடிபட்ட மிகப்பெரிய அளவிலான போதைப்பொருள் அளவு இதுவாகும். இந்த மெத்தம்பெட்டமைன் போதைப்பொருளானது மூளையை தூண்டி உற்சாகமான மனநிலையை கொடுக்கும். அதேவேளையில் மத்திய நரம்பு மண்டலத்தை பாதிக்கும் ஒரு சக்திவாய்ந்த போதைப்பொருளாகும். இது பசியின்மையை ஏற்படுத்தும் திறன் கொண்டது. வெள்ளை நிறத்தில் மணமற்றதாக இருக்கும் மெத்தம்பெட்டமைன் தண்ணீர், ஆல்கஹாலில் எளிதில் கரையும்.

மேலும் இதை மாத்திரையாகவும், தூளாகவும் போதைக்குபயன்படுத்துவர். கைதான 29 வயது கோமல்பிரீத் சித்து, கனடாவின் வின்னிபெக் பகுதியைச் சேர்ந்தவர். இந்த லாரி, அமெரிக்காவில் இருந்து மானிடோபா மாகாணத்துக்கு சென்று கொண்டிருந்தது" என்றார்.

# 17-ஆம் நூற்றாண்டின் ஓவியத்தினால் பதவி விலகிய அமைச்சர்



**இத்தாலி : பிப். 4,**

**ஐரோப்பாவில் உள்ள பண்டைய நாடு, இத்தாலி. ரோமானிய கலாச்சாரத்தை பறைசாற்றும் அந்நாட்டில் பழங்கால ஓவியங்களுக்கும், ஓவியர்களுக்கும் இன்றளவும் ஆர்வலர்கள் அதிகம்.**

அந்நாட்டின் 605 இடங்களை கொண்ட பாராளுமன்ற உறுப்பினரும், கலாச்சார அமைச்சருமான 71 வயதான விட்டோரியொ ஸ்கார்பி பழமையான கலைப்பொருட்கள் மற்றும் அரிய ஓவியங்களை வாங்குவதில் ஆர்வம் கொண்டவர். 2013ல், இத்தாலியின் வடக்குபீட்மாண்ட் பகுதியில் உள்ள ஒருவருக்கு சொந்தமான கோட்டையில் பல ஆண்டுகளாக இருந்த 17-ஆம் நூற்றாண்டை சேர்ந்த ருடிலியோ மானெட்டி எனும் ஓவியர் வரைந்த "தி கேப்ச்சர் ஆஃப் செயின்ட் பீட்டர்" எனும் ஓவியம் திருடு போனது.

2021ல் அமைச்சர் ஸ்கார்பி ஏற்பாடு செய்திருந்த ஒரு கண்காட்சியில் இந்த ஓவியம் மீண்டும் காட்சிக்கு வைக்கப்பட்டது. 2013ல் காணாமல் போன ஓவியம் போலவே இது இருந்தாலும், இந்த ஓவியத்தின் இடது மேற்புறத்தில் ஒரு மெழுகுவர்த்தி தென்பட்டது. சுமார் 20 வருடங்களுக்கு முன் தனது தாயார் வாங்கிய ஒரு பழமையான வில்லாவில் இதை கண்டெடுத்ததாகவும், இதுதான் ருடிலியோ மானெட்டியின் "அசல்" ஓவியம் என்றும் 2013ல் களவு போனது "நகல்" என்றும் ஸ்கார்பி கூறி வந்தார்.

ஆனால், 2013ல் களவு போன ஓவியத்தில் கைதேர்ந்த ஓவியநிபுணர்களை கொண்டு ஸ்கார்பி சில மாற்றங்கள் செய்து புதியதாக காட்டியதாக அவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதையடுத்து காணாமல் போன ஓவியத்தை தேடவும், ஸ்கார்பியின் ஓவியம் உண்மையா அல்லது 2013ல் களவு போன ஓவியமா என கண்டறியவும் விசாரணை முடுக்கி விடப்பட்டது.

இதை தொடர்ந்து எழுந்த விமர்சனங்களின் விளைவாக அமைச்சர் விட்டோரியோ ஸ்கார்பி, தற்போது தனது பதவியை ராஜினாமா செய்தார். "நான் எந்த குற்றமும் செய்யவில்லை. விசாரணைக்கு எனது பதவி இடையூறாக இருக்க கூடும் என்பதால், நான் பதவி விலகுகிறேன். இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலனிக்கு தகவல் தெரிவித்துவிட்டேன்" என அமைச்சர் ஸ்கார்பி தெரிவித்தார்.

# ஈரான் ஆதரவு கிளர்ச்சி குழுக்களை குறிவைத்து ஈராக், சிரியாவில் வான்வழி தாக்குதல் – அமெரிக்கா அதிரடி



**பாக்தாத் : பிப். 4,**

**ஈரான், சிரியாவில் செயல்பட்டுவரும் ஈரான் ஆதரவு கிளர்ச்சி குழுக்களை குறிவைத்து அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக ஹமாஸ் மீதுபோர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேலுக்கும், ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கும் இடையேயான போர் 3 மாதங்களுக்கு மேல் நீடித்து வருகிறது.

இந்த போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குழு ஆதரவு அளித்து வருகிறது. மேலும், செங்கடல் வழியாக இஸ்ரேல் மற்றும் இஸ்ரேலின் ஆதரவு நாடுகளுக்கு செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.


இந்த தாக்குதலுக்கு பதிலடியாக, ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நிலைகளை குறிவைத்து அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து சமீபத்தில் அதிரடியாக வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலால் மத்திய கிழக்கு பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இதனிடையே, ஜோர்டான் நாட்டில் உள்ள அமெரிக்க படைத்தளம் மீது கடந்த மாதம் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. சிரியாவின் எல்லை அருகே அமைந்துள்ள படைத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அமெரிக்க ராணுவ வீரர்கள் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், 40 பேர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலை சிரியாவில் செயல்பட்டுவரும் ஈரான் ஆதரவு கிளர்ச்சி குழுக்கள் நடத்தியதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது.

இந்நிலையில், ஈராக், சிரியா மீது அமெரிக்கா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. ஈராக், சிரியாவில் செயல்பட்டுவரும் ஈரான் புரட்சிப்படையின் ஆதரவு கிளர்ச்சி குழுக்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 85 இலக்குகள் மீது 125 முறை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. சிரியா, ஈராக்கில் செயல்பட்டுவரும் ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் குழுக்களின் கட்டுப்பாட்டு மையங்கள், ராக்கெட்டுகள், ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள், ஆயுத சேமிப்பு கிடங்குகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# தென்கொரியாவுக்கு எதிராக போர்

## தயார் நிலையில் இருக்க கிம் ஜாங் அன் உத்தரவு



**பியாங்க்யாங் : பிப். 4,**

**வடகொரியா, ஜப்பான் மற்றும் தென்கொரிய கடற்பகுதியில் ஏவுகணை சோதனை நடத்தி பதற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது.**

கொரிய தீபகற்ப பகுதியில் வடகொரியா தொடர் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனைகளை நடத்துகின்றது. எனவே நீண்ட தூர ஏவுகணை சோதனை நடத்த வடகொரியாவுக்கு ஐ.நா. தடை விதித்துள்ளது.

ஆனால் அதனை பொருட்படுத்தாத வடகொரியா ஜப்பான் மற்றும் தென்கொரிய கடற்பகுதியில் ஏவுகணை சோதனை நடத்தி பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. எனவே தங்களது பாதுகாப்பு கருதி தென்கொரியாவும், ஜப்பானும் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன. இது தங்களுக்கு எதிரான போர் ஒத்திகை என கருதும் வடகொரியா இதனை கைவிட வேண்டும் என வலியுறுத்தி வருகிறது. மேலும் தங்கள் மீது தாக்குதல் நடத்தினால் எதிரி நாடுகள் முற்றிலும் அழிக்கப்படும் என வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன் எச்சரிக்கை விடுத்தார். அதனை பொருட்படுத்தாத அந்த நாடுகள் மீண்டும் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இது வடகொரியாவுக்கு ஆத்திரத்தை கிளப்பியது.

இதனால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மீண்டும் தென்கொரியா கடற்பகுதியில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியது. இந்த பதற்றத்துக்கு இடையே கிம் ஜாங் அன் நம்போவில் உள்ள கப்பல் கட்டும் தளத்துக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அங்குள்ள ராணுவ வீரர்களிடையே அவர் பேசும்போது, நாட்டின் கடல்சார் இறையாண்மையை பாதுகாப்பதிலும், போர் தயாரிப்புகளை முடுக்கி விடுவதிலும் கடற்படை முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே போருக்கான ஏற்பாடுகளை முடுக்கி விடுமாறு ராணுவத்துக்கு அழைப்புவிடுத்தார். இதனால் கொரிய தீபகற்ப பகுதியில் மீண்டும் போர்ப்பதற்றம் அதிகரித்துள்ளது.

# அரசியல் சிக்கலாக மாறி வரும் அகதிகள் பிரச்சனை



**அமெரிக்கா : பிப். 4,**

**தினந்தோறும் அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாக நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.**

ஆண்டுதோறும், லட்சக்கணக்கான மக்கள் தங்கள் நாடுகளில் இருந்து கடல் மற்றும் தரை வழியாக ஆபத்தான நீண்ட பயணங்களை மேற்கொண்டு, சட்டவிரோதமாக அமெரிக்காவில் நுழைந்து சில ஆண்டுகள் தங்கியிருந்து, குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முயல்வது தொடர்கதையாகி வருகிறது.

2021லிருந்து தற்போது வரை மட்டுமே 6.3 மில்லியன் அகதிகள் சட்டவிரோதமாக உள்ளேநுழைந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு வரும் அகதிகளால் அமெரிக்காவில் சமீப சில வருடங்களாக சட்டம்-ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படுவதாக விமர்சனங்கள் எழுந்தன. இந்நிலையில், அமெரிக்காவின் நியூயார்க் நகரின் மன்ஹாட்டன் பகுதியின் மையத்தில் உள்ள புகழ் பெற்ற டைம்ஸ் ஸ்கொயர் பகுதியில் ஒரு சிறிய அகதிகள் குடியிருப்பில், கும்பலாக கூடியிருந்த அகதிகள் சிலரை கலைந்து போகுமாறு சில காவல் அதிகாரிகள் கூறினர்.

அவர்கள் அதற்கு மறுத்து, காவல்துறையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, அவர்களை கைது செய்ய காவல் அதிகாரிகள் முயன்றனர். அப்போது அந்த அகதிகளில் சிலர் காவல் அதிகாரிகளை தாக்கினர். இதில் அந்த அதிகாரிகளுக்கு லேசான காயம் ஏற்பட்டது. சுமார் 12 பேர் ஈடுபட்டதாக கூறப்படும் இச்சம்பவம் தொடர்பாக 6 அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் 5 பேர் பிணையில் விடப்பட்டனர்; ஒருவர் சிறையில் உள்ளார்.

தாக்குதலில் ஈடுபட்ட பிறரையும் காவல்துறையினர் தேடி வருகின்றனர். அவர்கள் ஒரு பேருந்தில் ஏறி தப்பி விட்டதாக கூறப்படுகிறது. இது குறித்த வீடியோ காட்சிகள் இணையத்தில் பரவியதால், இரு கட்சிகளை சேர்ந்த வாக்காளர்களில் பலர், கட்சி பேதம் இன்றி சமூக வலைதளங்களில் இத்தாக்குதலுக்கு கண்டனங்களை தெரிவித்தனர்.

காவல்துறையினர் மீதான தாக்குதலுக்கு நியூயார்க் காவல்துறையும் கண்டனம் தெரிவித்துள்ளது. இவ்வருட இறுதியில் அமெரிக்காவில் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில், தீவிரமாக களம் இறங்கியுள்ள ஜனநாயக கட்சியை சேர்ந்த தற்போதைய அதிபர் ஜோ பைடனுக்கும், முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிற்கும் "சட்டவிரோத அகதிகள்" பிரச்சனை, வாக்காளர்களை ஈர்க்கும் அம்சமாக மாறி உள்ளது.

# வாஷிங்டன் வெடிகுண்டு நிபுணர்களுக்கு வந்த வினோத அழைப்பு



**அமெரிக்கா : பிப். 4,**

**பல வருடங்களுக்கு முன், அமெரிக்காவின் வாஷிங்டன் மாநில பெல்லவ்யூ நகரில் ஒருவர் மிக பெரிய எஸ்டேட் ஒன்றை விலைக்கு வாங்கினார். அதை வாங்கிய போது அதில் ஒரு பழமையான பொருளும் கிடைத்தது.**

அவர் காலமானதும், அவரது பக்கத்து வீட்டுக்காரர் ஒஹையோ மாநில டேடன் பகுதியில் உள்ள அமெரிக்க விமானப்படைக்கு சொந்தமான அருங்காட்சியகத்திற்கு அழைப்பு விடுத்து, தனது வீட்டின் வாகன பழுதுபார்க்கும் இடத்தில் உள்ள ஒரு "ராக்கெட்டை" அருங்காட்சியகத்திற்கு தானமாக வழங்க விரும்புவதாகவும், அது வெடிக்க கூடிய ஆபத்தான நிலையில் உள்ளதா என ஆய்வு செய்து கூறவும் அருங்காட்சிய அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து உடனடியாக அந்த அருங்காட்சியக அதிகாரிகள், பெல்லவ்யூ காவல்நிலையத்தை தொடர்பு கொண்டு விவரத்தை கூறினர். தொடர்ந்து பெல்லவ்யூ காவல் நிலைய அதிகாரிகள், அழைப்பு விடுத்தவரின் இல்லத்திற்கு சென்றனர். தகவல் தெரிவிக்கப்பட்டு, வெடிகுண்டு நிபுணர்களும் விரைந்து வந்தனர். அங்கு வெடிகுண்டு நிபுணர்கள், "டக்ளஸ் ஏர்-2 ஜீனி" ரக வான்வழி ராக்கெட் ஒன்றின் பாகத்தை கண்டனர். துருப்பிடித்த நிலையில் இருந்த அந்த பாகம், சுமார் 1.5 கிலோ டன் எடையுள்ள அணு ஆயுதத்தை தாங்கி செல்லும் திறன் வாய்ந்த ராக்கெட்டின் பாகமாகும். 1962ல் இத்தகைய ராக்கெட்டுகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டது.

இவை அமெரிக்க ராணுவத்தின் விமானப்படையால் ரஷ்ய - அமெரிக்க பனிப்போர் காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டன. அப்போது இருந்த டக்ளஸ் விமான தயாரிப்பு நிறுவனத்தால் இவை தயாரிக்கப்பட்டன. 1997ல் அந்நிறுவனம் பிரபல விமான உற்பத்தி நிலையமான போயிங் நிறுவனத்துடன் இணைந்தது. மிக பழமையான அப்பொருளை பரிசோதித்த நிபுணர்கள் காவல்துறையினரிடம் தெரிவித்ததாவது: அந்த துருப்பிடித்த பழமையான பாகம், ராக்கெட்டின் எரிபொருளுக்கான "கேஸ் டாங்க்" பகுதி. அதில் எந்த எரிபொருளும் மிச்சம் இல்லை. அதில் ஏவுகணை ஏதும் இணைக்கப்படவும் இல்லை. அது எந்த வகையிலும் ஆபத்தில்லாதது என்று நிபுணர்கள் உறுதிபட கூறினர். தொடர்ந்து அதன் உரிமையாளர், தனக்கு விருப்பமான அருங்காட்சியகத்திற்கு அதை வழங்கிட காவல் மற்றும் வெடிகுண்டு அதிகாரிகள் அனுமதி அளித்தனர்.

# பிரான்ஸ் ஈபில் டவரில் யு.பி.ஐ. பரிவர்த்தனை சேவை அறிமுகம்




**பாரிஸ் : பிப். 4,**

**யு.பி.ஐ. மூலம் பணம் செலுத்தும் நாடுகளின் பட்டியலில் பிரான்சும் இணைந்துள்ளது.**

யு.பி.ஐ. எனப்படும் டிஜிட்டல் பண பரிவர்த்தனையானது சாலையோர கடைகளில் இருந்து மால் வரை அனைத்து இடங்களிலும் உள்ளது. ஜிபே, போன் பே போன்ற செயலிகளில் யு.பி.ஐ. பயன்படுத்தி நாம் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் பணம் செலுத்தலாம் மற்றும் பணத்தைப் பெறலாம்.

இந்தியாவின் யு.பி.ஐ. சேவை உலகிற்கே முன்மாதிரியாக இருந்துவருகிறது. பல்வேறு நாடுகளும் யு.பி.ஐ. மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகளை ஏற்க தொடங்கியுள்ளன. இந்நிலையில், யு.பி.ஐ. மூலம் பணம் செலுத்தும் நாடுகளின் பட்டியலில் பிரான்சும் இணைந்துள்ளது. பாரிசில் உள்ள இந்திய தூதகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் என்.பி.சி.ஐ-ன் சர்வதேச பரிமாற்ற அமைப்பும், பிரான்சின் பரிவர்த்தனைகள் அமைப்பும் இணைந்து இந்த அறிவிப்பை வெளியிட்டன.


இதன்படி, இனி பிரான்ஸ் நாட்டில் யு.பி.ஐ. பயன்படுத்தி பணம் செலுத்த இயலும். இனிமேல் பிரான்ஸ் செல்லும் இந்தியர்கள் யு.பி.ஐ. வாயிலாக பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியும். இந்தியர்கள் இனி ஈபிள்டவரை பார்க்க வேண்டுமெனில் முன்கூட்டியே யு.பி.ஐ. மூலம் பணம் செலுத்தி ஆன்லைனில் டிக்கெட் பதிவு செய்துகொள்ளலாம். முதன்முறையாக இந்தியாவின் யு.பி.ஐ. பரிவர்த்தனையை ஏற்கும் ஐரோப்பிய நாடாக பிரான்ஸ் மாறியுள்ளது.

# மனைவியை தேர்ந்தெடுக்க ஏ.ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்திய வாலிபர்

**ரஷியா : பி. 4,**

**ரஷியாவை சேர்ந்த வாலிபர் ஒருவர் ஆன்லைன் டேட்டிங்கிற்காக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் சாட்ஜிபிடியை பயன்படுத்தி உள்ளார்.**

ரஷியாவைசேர்ந்தசாப்ட்வர் டெவலப்பரான அலெக்சாண்டர் ஜாதன் என்பவர் டிண்டர் செயலியில் தனக்கு பொருத்தமான பெண்களை கண்டறிய சாட்ஜிபிடி மற்றும் செயற்கைநுண்ணறிவுதொழில் நுட்பத்தின் இதர பாட்களை பயன்படுத்தி உள்ளார்.




இதன்மூலம்சுமார்5ஆயிரம் பெண்களுடன் சாட் செய்த பிறகு கரினா என்ற பெண்ணை ஏ.ஐ. தொழில்நுட்பம் அவருக்கு சரியான பொருத்தமாக அடையாளம் காட்டியதாக அலெக்சாண்டர் கூறியுள்ளார். அவருக்கான சரியான பொருத்தத்தை கண்டுபிடிக்க சுமார் 1 வருடம் ஆனதாக அவர் கூறினார்.

# “பாஜகவை எதிர்த்து நாம் உறுதியாக போராடாவிட்டால்” ஆபத்து; கார்கே





# ஜார்க்கண்ட் பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் பங்கேற்க ஹேமந்த் சோரனுக்கு நீதிமன்றம் அனுமதி

# பாஜக மூத்த தலைவர் எல்.கே.அத்வானிக்கு பாரத ரத்னா விருது : மோடி தகவல்




சென்னை / புதுக்கோட்டை | 04.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்


மடபூஷிய அனந்தசயனம் அய்யங்கர், இந்திய அரசியல்வாதி, 2வது இந்திய மக்களவைத் தலைவர் (பி.1891) (இ.1978)



பி. ஏ. சுப்பையா பிள்ளை, தமிழக நாடக, திரைப்பட நடிகர் (பி.1895)



ராம் பரன் யாதவ், நேபாளத்தின் 1வது குடியரசுத் தலைவர் (பி.1948)



## இன்றைய நினைவு நாள்

மதுசூதன் தாசு, ஒடிசா கவிஞர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1848) (இ.1934)



சத்தியேந்திர நாத் போசு, இந்திய இயற்பியலாளர், கணிதவியலாளர் (பி.1894) (இ.1974)



புளியங்குடி க. பழனிச்சாமி, தமிழக அரசியல்வாதி, பேச்சாளர் (பி.1938) (இ.2007)



## விடுதலை நாள் (இலங்கை)

## உலகப் புற்றுநோய் நாள்